NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 2-00 — 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 | பங்குனி 17 | ரஜப் 18 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (30—3—86) | இதழ் 48

### - சந்நிதியான் மணிகளுக்கு ஓய்வு -
## ஆலயம் ஒரு வாரத்துக்கு மேல் பொலிவிழந்த கோலம்!!

(புலோலி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் எதுவித பூசைகளுமின்றி சுமார் எட்டு நாட்களாக மூடப்பட்டுக் கிடக்கின்றது.

கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் இம் முருகன் ஆலயம் மூடப்பட்டே இருக்கின்றது. அடியார்கள் எவரும் (11ம் பக்கம் பார்க்க)

✯ காங்கேசன்துறை ✯ மயிலிட்டி ✯ பலாலியை உள்ளடக்கிய

# பாரிய முப்படைத் தளம் அமைக்கத் திட்டம்?

## நவீன கருவிகள், சாதனங்களை கொண்டிருக்கும் சாத்தியம்!

(ஏ. வி. மாணிக்கம்)

**வடபகுதி தமிழ்த்தீவிரவாதிகளை முறியடிப்பது என்ற பேரில் காங்கேசன்துறை, மயிலிட்டி பலாலிப் பிரதேசங்களை உள்ளடக்கிப் பாரிய அளவில் ஒரு முப்படைத்தளமொன்றை உருவாக்கும் அறிகுறிகள் புலப்பட ஆரம்பித்துள்ளன. இத்தளம் வடக்கே கொண்டு வரப்பட்டுள்ள நவீன இராணுவ சாதனங்களுடன், பலாலி விமானத்தளத்தில் நவீன விமானங்களையும், காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நவீன கடற்படை இறங்குதுறை வசதிகளையும் கொண்டிருக்கும் எனத் தெரியவந்துள்ளது.**

காங்கேசன்துறைத் தொகுதி முப்படைகளையும் இணைக்கக் கூடியவகையில் பாரிய முப்படைத் தளம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை இப்பகுதிகளில் இடம்பெற்று வரும் அண்மைக்கால நடவடிக்கைகள் மூலம் அறியப்பட்டுள்ளது.

யின் பெருப்பகுதியை உள்ள டக்கி கடற்படை, ஆகாயப் படை, தரைப்படை ஆகியவற்றை

காங்கேசன்துறை ஹாபர் (11-ம் பக்கம் பார்க்க)

### திருக்கோவில் கரையோரத்தில் மர்மக்கப்பல்!

(கொழும்பு)

கிழக்கு ஐரோப்பிய நாடொன்றுக்கு சொந்தமானதென்று கருதப்படும் கப்பலொன்று கிழக்குப்பகுதியில் திருக்கோவில் கரையோரத்துக்கு அப்பால் சுமார் இரண்டு மைல் தொலைவில் நேற்றுமுன் தினம் காணப்பட்டது. இந்தக் கப்பலில் 'எம்பொமாட்' என்ற பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது.

கப்பலில் நிறைந்தஅளவில் கொள்கலன்கள் காணப்பட்டன இதே (11-ம் பக்கம் பார்க்க)

### நாளை ஓய்வுபெறும் ரொமேஷ் பண்டாரி!



(புதுடில்லி)

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி நாளை திங்கட்கிழமை தனது பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வு காணுவதில் இந்தியா மேற்கொண்டுவந்த மத்தியஸ்த முயற்சிகளின்போது ஒரு சர்ச்சைக்குரிய நபராகத் திகழ்ந்த திரு. பண்டாரி, இவ் விஷயத்தில் தொடர்ந்தும் இந்தியாவின் விசேஷ தூதுவராகக் கடமையாற்றுவாரா என்பது கேள்விக்குரியதாக உள்ளது.

நிஜத்தில் பேச்சுவார்த்தை வாயிலான ஒரு தீர்வில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன தீ ரகரிசனை கொண்டுள்ளார் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படாத சூழலில் திரு பண்டாரி இந்தியாவின் விசேஷ தூதுவராக இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கான சாத்தியபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன (ஷ)

### டாக்டர்கள் வார்ட்டுக்களை பார்வையிடவில்லை!

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று டாக்டர்கள் வழக்கம்போல் காலையும் மாலையும் வார்ட்டுகளுக்கு சென்று நோயாளிகளை பார்வையிடவில்லை

அவசியம் பார்வையிட வேண்டிய நோயாளிகளை மட்டுமே வார்ட்டிற்குச் சென்று டாக்டர்கள் பார்வையிட்டனர்.

வெளிநோயாளர் பகுதியில் நேற்றுக்காலை அவசர நோயாளர்களை மட்டுமே டாக்டர்கள் பார்வையிட்டதனல் நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர் திரும்பிச்செல்ல நேர்ந்தது. (க)

மானிப்பாய் இந்துக் கல்லூரி

முறைசாராக் கல்விநெறி

1986

SHORT HAND & TYPING

(ENGLISH)

(April 1986 to November 1986)

கல்விப் பகுதியின் அங்கீகாரத்துடன்

04-04-1986 (வெள்ளிக்கிழமை ஆரம்பம். G C. E (O/L) பரீட்சையில் ஆங்கிலம், தமிழ், கணித பாடங்களுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி அடைந்த, பாடசாலையைவிட்டு விலகிய 16—45 வயதுக்குட்பட்டவர்கள் தமது கல்விச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ், நற்சாட்சிச் சான்றிதழ் போன்றவற்றுடன் 02-04-1986 (புதன்கிழமை) முற்பகல் 11-00 மணிக்கு முன்னர் என்னிடம் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். இப் பாடநெறிக்கு இருபது மாணவர்கள் மட்டும் தெரிவுசெய்யப்படுவார்கள். இறுதிப் பரீட்சை கல்வி இலாகாவினல் நடாத்தப்பட்டு - கல்விப் பகுதியின் சான்றிதழ் வழங்கப்படும்.

சி. வே. மஹேஸவேலு
அதிபர்.
29-03-1986

(A 527)

## வடக்கில் முகாம்களிலிருந்து வெகுவிரைவில் இராணுவம் வெளியே வரும்!

### அமைச்சர் லலித் எச்சரிக்கை

(கொழும்பு)

வடக்கிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து வெகுவிரைவில் ஆயுதப்படையினர் வெளியே வரப்போகிறார்கள் என்றும், மக்கள் தீவிரவாதிகளிருக்கும் இடங்களிலிருந்து கூடியவிரைவில் வெளியேற வேண்டும் என்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி எச்சரிக்கை செய்துள்ளார்

வடக்கிலுள்ள இராணுவ முகாமொன்றினைத் தாக்கத் தீவிரவாதிகள் போட்டிருந்த திட்டமொன்று அம்பலத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், தொடர்ந்தும் முகாம்களை நோக்கித் தாக்குதல்கள் நடாத்தப்படும் பட்சத்தில், ஆயுதப் படையினர் தமது முழுப்பலத்துடன் வெளியே வந்து தீவிரவாதிகளை விரட்டியடிப்பரென்றும், இவ்வேளையில் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகி விடுமென்றும் திரு அத்துலத் முதலி மேலும் கூறினர். (ஷ)

### 150 துருப்புகளுடன் ஓமந்தையில் புதிய இராணுவ முகாம்!

(யாழ்ப்பாணம்)

ஓமந்தை பழைய கிராம சபை அலுவலகத்தையும் வாசிகசாலையையும் உள்ளடக்கிய பகுதியில் நேற்று இராணுவமுகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது

லெப்டினன்ட் வீரசிங்க தலைமையில் கறுப்புச்சட்டையினர் உட்பட சுமார் 150இராணுவத்தினர் இம்முகாமில்கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த இரரணுவ முகாமுக்கான முட்கம்பி வேலிபோடுதல், அகழிவெட்டுதல்போன்ற (11ம் பக்கம் பார்க்க)

### நேற்றும் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

பலாலி ஆகாயப்படை, தரைப்படை முகாம்களுக்கு அண்மையில் உள்ள கிராமங்களின் மீது நேற்றும் ஹெலிக் [11ம் பக்கம் பார்க்க]

### மாறு வேடங்களில் ஆயுதபாணிகள்!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி ஜெயந்திநகரில் மாறுவேடங்களில் பலர் ஆயுதங்கள் சகிதம் நடமாடினர்கள். வேட்டி, சேட் அணிந்து தலைப்பாகை கட்டியோரும், விவசாயிகள்போல் வேடந்தரித்தோரும் பல இடங்களிலும் நடமாடினர்களென இப் [11ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சிங்கர் தையல் மெஷின், அல்மாரி, சியஸ்ரா மெத்தைகள், கட்டில்கள், Belling Oven, கசற் றேடியோக்கள், Wall Clock மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் றோட், மருத்துவக்கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்குமிடையில். C-1472

யாழ்ப்பாணம்,396, கே.கே.எஸ். வீதியிலுள்ள வீடு விற்பனைக்குண்டு. விபரங்கட்கு மேலேயுள்ள விலாசத்திற்கு நேரில் தொடர்புகொள்ளவும். C-1452

அப்பளம் தயாரிப்பதற்கான தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. அல்லது கமிஷன் அடிப்படையிலும் இடவசதியுடன் கொடுக்கப்படும். தொடர்பு: 484, பீச் றோட், தந்தைஇல்லம், நாவாந்துறை, வடக்கு. C- 1470

றோசா செடிகளுக்கான விஷேச உரம் விற்பனைக்குண்டு. எம். ஜீ. எம். 781, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். [C 1433]

சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: P.சதானந்தன், ''நிருத் ஏஜென்சி'', 183, கண்டி வீதி, ாவகச்சேரி, [C 1466]

வீட்டுத்தளபாடங்கள், கட்டில், மேசைகள், கண்ணாடி அலுமாரி, Dressing Table, குளிர்சாதனப்பெட்டி, Washing Machine, புதிய Chopper Cycle, கசற் றேடியோக்கள், சில்வர், பித்தளை Pyrex கிளாஸ் வகைகள், கிளாஸ் புத்தக அலுமாரி, அல்ஷேசியன் நாய், நாய்க்கூடு, அரிசிப்பத்தாளம், Typewriter, வெளியூர் பெட்சீற், கம்பளிகள் உடன் விற்பனை குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் றோட், திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக்கல்லூரிக்குமிடையில். (C1451)

## சேவை

யாழ். மக்களுக்கு ஓர் நற்செய்தி: புதிய நிர்வாகத்தின் கீழ் நவீன தங்குமிடம், உணவு வசதிகளுடன் மீண்டும்- New Walkinn, 41/1, W.A. Silva Mawatha, Wellawatha. Reservation on Telephone No: 581017, Rs. 50/- upwards. (A518)

சகலவித ரேடியோ, டேப் றெக்கோடர், ரெலிவிசன் (Black and White, Colour) திருத்திக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: வி. நித்தியானந்தன், கல்வளை, சண்டிலிப்பாய். (C 1474)

## தவறிவிட்டது

மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் குப்பிழான் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்திற்கு எதிரேயுள்ள 5¼ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு; 5, மகேஸ்வரா, 'அன்ன வில்லா', கற்பகப்பிள்ளையார் ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். [C 1447]

## MATRIMONIAL

31 years B. Sc Engineer following M Sc. in London seeks Hindu Vellala fair attractive (Vegetarian preferable) Doctor, I C M A or qualified bride. Inter - marriage with B Sc [English medium] fair attractive sister. Both mars afflicted Proposals from U K also will be considered Advertisement No. C-1428, C/o Eelanadu, Jaffna. C-1428

## விற்பனைக்கு

இணுவிலில் 4¼ பரப்புக் காணி விற்பனைச்குண்டு தோட்டம், வீடுகட்ட ஏற்றது S. J. வரதன்; ''ஜெயானந்த வாசம்'' இணுவில் தெற்கு. [A 1401]

Ford Consul EN இலக்கக் கார் நல்ல நிலையில் புதுப்பிக்கப்பட்டது. (2) Raleigh Frameல் துவிச்சக்கரவண்டி (3) கட்டில்கள். ஸ்ரீநிவாசன், மருதனுமடம், சுன்னுகம். [C 1480]

மாணவர்களே! ஆங்கில அறிவு வளர்ச்சிக்கு பெருந்தொகையான வினைச் சொற்கள் சகல பிரிவுகளுடனும் தமிழ்க் கருத்துடன் VERBS and MEANINGS விலை 14/- ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C 1463]

20'' கலர் J. V C. டெலிவிஷன், அன்ரனு, பைப் விற்பனைக்குண்டு 40, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் [C 1457]

சிசில் குளிர்சாதனப் பெட்டி R80, தொம்சன் சுவர்க் சடிகாரம், சிறு பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்கள், கென்வூட் கேக் அடிக்கும் சாதனம், வயிற் செற், றேடியோக்கள், தளபாடங்கள். பழைய தீராந்தி பனைமரங்கள் விற்பனைக்குண்டு. 141, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம் [C 1490]

## தேவை

நல்ல வீட்டுப் பாவனையிலிருக்கும் Air Conditioner, Amplifier, Boys Cycleஉடன் தேவை. விளம்பர இல: C-1486, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-1486]

ஆங்கில பிற்மன், தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து படிப்பிப்பதற்கு உகந்த பகுதிநேர ஆசிரியைகள் உடனே தேவை. தற்போதைய தொழில், எதிர்பார்க்கும் சம்பளம் அடங்கிய முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: இம்பீரியல் இன்ஸ்ரிரியூட், இளவாலை. [C-1488]

தரமான றப்பர்சீல்களுக்கு ஏகாம்பரநாதன்ஸ். V. P. P. ஆடர்கள் ஏற்கப்படும் ஆடர் சேகரிக்க எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை: Ahembaranathans, 180, Kasthuriar Road, Jaffna. [C 1462]

சிறிய குடும்பமொன்றிற்கு தற்காலிக வதிவிடமாக வீடு அல்லது அனெக்ஸ் தேவை. யாழ் நகரில் அல்லது பலாலி வீதியில் அல்லது K K. S. வீதியில் விரும்பத்தக்கது. Bond Institutes, 274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C-1478]

## JAFFNA COLLEGE ENGLISH MEDIUM CLASSES

Classes for Advanced Level and Ordinary Level students will be conducted for those requiring proficiency in their Subjects in English as a preparation for higher studies here or abroad.

Classes commence on the 5th May, 1986. For further details and enrolment meet the Principal along with parent or guardian after 28th April.

PRINCIPAL,
Jaffna College,
Vaddukoddai. A-517

## கல்வி

G C. E [O/L] இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு 17 வருட அநுபவமுள்ள ஆசிரியரினுல் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும் மற்றும் [O/L], [A/L] சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர்களினுல் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, or Jaffna Radio Electricals, 91/5, Hospital Road. [C-1491]

## வாடகைக்கு

60 x 15 அடி நீள அகலமான கடை சகல வசதிகளுடன் ஸ்ரான்லி வீதியில் வாடகைக்குண்டு. தொடர்பு; நா. லோகநாதன், நியூ பூட் எம்போரியம், 47, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C 1489)

## மணப்பந்தல்

31 வயதுடைய இந்துமத வேளாள இனத்தைச் சேர்ந்த சட்டம் பயிலும் அழகிய மணமகளுக்கு டாக்டர், என்ஜினியர் அல்லது அரசாங்க திணைக்களத்தில் உயர்பதவி வகிப்பவரான மணமகன் தேவை. சீதனம் போதியளவு வழங்கப்படும். சாதக்குறிப்புடனும் மற்றறைய சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்க. விளம்பரஇல: C1420 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம் C 1420

யாழ்ப்பாணம் இந்து வேளாளகுல அழகிய 28 வயது நிரம்பிய 7ல் செவ்வாய் I. C.M.A. படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை. வெளிநாட்டில் தொழில் பார்க்கும் Accountant, Engineer, Doctor, University Lecturer விரும்பத்தக்கது. சாதகக்குறிப்பு குடும்ப விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C 1471 C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம் C 1471

யாழ்ப்பாண இந்து வேளாளர் குல 39 வயதுடைய பெண்ணுக்கு நற்குணமுடைய மணமகன் தேவை. ரூபா ஐம்பதினுயிரம் ரொக்கமும், நகைகளும் கொடுக்கப்படும். இதே இனத்தைச் சேர்ந்தவர்கள் முழுவிபரங்களுடன் (சாதகம், புகைப்படம் உட்பட) தொடர்பு கொள்ளவும், விளம்பர இல C 1482, ஈழநாடு, யாழ்ப்பாணம். C 1482

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மின்தறி நெசவாளர் தேவை

மின்தறிவேலை செய்யக்கூடிய பெண் நெசவாளர்கள் தேவை. நேரில் வரவும். கைத்தறியில் வேலை செய்தோரும் விரும்பப்படுவர். அனுபவமுள்ளவர்கட்கு கூடிய சம்பளம் வழங்கப்படும்.

**சக்தி மின்தறி ஆலை,**
பலாலி றோட், திருநெல்வேலி.
C-1454

## ஹோமியோபதி மீளாய்வு வகுப்புக்கள்

5-வது மீளாய்வு வகுப்புக்கள் 1986 மே மாதம் ஆரம்பமாகின்றன. பங்குபற்ற விரும்புவோர் கீழ்க்கணும் முகவரியில் 20-4-86ம் திகதிக்கு முன்னர் நேரில் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
**வட இலங்கை ஹோமியோபதி சங்கம்**
5, நாவலர் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
C-1430

## உருக்கமான வேண்டுகோள்

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த திரு. கந்தசாமி இரத்தினவடிவேல் ஆசிரியருக்குச் சொந்தமான 88ஸ்ரீ 653 என்ற இலக்கத்தைக்கொண்ட CG-125, Honda (நீலம்) மோட்டார் சைக்கிள் 25-3-86 செவ்வாய்க் கிழமை இரவு 11மணியளவில் மூவரால் துப்பாக்கி முனையில் அடுத்தநாள் திருப்பித்தருவதாகச் சொல்லிக் கடத்தப்பட்டது ஆனுல் இதுவரை சைக்கிளை திருப்பித்தரவில்லை. இயக்கங்கள் கூடியகவனமெடுத்து கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை உரியவரிடம் ஒப்படைக்கவேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டுகின்றோம்.

இப்படிக்கு
**பிரஜைகள் குழு,**
C-1487 சண்டிலிப்பாய்.

## சேமிப்புக்கணக்கு, நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருப்பவர்களுக்கு ஓர் அறிவித்தல்

1. 1985-ம் ஆண்டு 56-ம் இல வருமானவரித் திருத்தச் சட்டத்தின் கீழ் உங்கள் வட்டி வருமானத்திலிருந்து 01-04-86 தொடக்கம் 20% பிடிப்பு வரி கட்டாயமாகக் கழிக்கப்படவிருக்கிறது.
2. வருடாந்த கூட்டு வருமானம் (உங்களினதும், 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளினதும்) வரிகட்டும் எல்லைக்கு மேற்பட்டிருந்தபோதும் வரி கட்டத் தவறியிருந்தால், அபராதத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

எனவே,

★ 20% வரிக் கழிவை விலக்கவும், குறைக்கவும்.

★ அபராதத்தைத் தவிர்க்கவும்.

உரிய படிவங்கள், விபரங்களை உடனே பெறுவதற்கு தொடர்புகொள்ளவும்:

**TAXMAN,**
கன்னதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
[A 525]

## பணிவான வேண்டுகோள்

எமது சங்கத்திற்குச் சொந்தமான நூல் விநியோக வெள்ளைநிற வான் 34 ஸ்ரீ 583 (Toyota Hiace) 16 - 2 - 86 நள்ளிரவிலும லொறி 24 ஸ்ரீ 9858 (Tata Benz) 25 - 3 - 86 நள்ளிரவிலும் ஆயுத முனையில் கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்த எமது தொழிற்சாலை வளவினுள்வைத்துக் கடத்தப்பட்டுள்ளது. வடமாகாணத்தின ஒரேயொரு நெசவு கூட்டுறவு அமைப்பான எமது சங்கத்திற்கு இக்கடத்தல்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பெரும்பாலும் பெண்களே ஈடுபட்டுள்ள நெசவுக் கைத்தொழிலும் மின்தறித் தொழிலும் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது அது மட்டுமல்ல ஏறத்தாழ 150 ஊழியர், 1200 கைத்தறி நெசவாளர் வரையில் வேலை இழக்கும் அபாயம் நேரலாம். வடமாகாணத்தின் ஒரேயொரு கூட்டுறவு முறையில் அமைந்த எமக்கு இக்கதி நேரிட்டது பெரும் மனவருத்தத்தை அளிக்கிறது. வேறு வாகனங்கள் கூடக் கைவசம் இல்லாத நிலை தயவுசெய்து பொறுப்புள்ள அமைப்புக்கள் இதில் தலையிட்டு இரு வாகனங்களையும் மீட்டுத்தருமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

**நிர்வாகிகள், ஊழியர்கள்.**
யாழ். மாவட்ட
புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.
[A-526]

# பாகிஸ்தான் அணு ஆயுதம் பெற்றால்

# ஆசியாவில் புதிய நிலைமை உருவாகும்!

## சோவியத் யூனியன் அச்சம்

(மாஸ்கோ)

பாகிஸ்தான் அணு ஆயுதங்களை வைத்திருக்குமானால் ஆசியாவில் புதிய நெருக்கடியும் சூழ் நிலையும் தோன்ற ஏதுவாகும் என சோவியத் யூனியன் அச்சம் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அணு ஆயுதங்களைப் பெறுவதால் தெற்கு மற்றும் தென் மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் புதிய நிலைமையொன்று உருவாகுமென சோவியத் யூனியன் கருதுகிறது.

ஆசியாவிலும் அனைத்துலகிலும் இதனால் அமைதிக்கு ஆபத்து ஏற்படும் எனவும் சோவியத் வெளியுறவு இலாகா அதிகாரி திரு. வெலத் அக்ரி தெரிவித்தார். (து)

## மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குக

[பூநகரி]

"அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட மீன்பிடித் தடைச்சட்டத்தினால் பூநகரியைச் சேர்ந்த மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதி மீனவருக்கு முன்பு வழங்கப்பட்ட நிவாரணப்பணமும் வழங்கப்படவில்லை எனவே இப்பகுதி மீனவர்கள் படும் அவலங்களை நீக்க உடனடி நடவடிக்கை எடுக்கவும் என்று பூநகரி கடற்றொழிலாளர் விரிவாக்க சேவை சங்கஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

### பலாலியில் பாதிக்கப்பட்ட

# காணிகள், மக்கள், மற்றும் விபரங்கள் தேவை

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காகச் சுவீகரிக்கப்படுகின்ற காணிகளில் உள்ள வீடுகள், காணிகளை விட்டு வெளியேறிய குடும்பங்கள், காணிகளில் குத்தகையாக விவசாயம் செய்வதில் ஈடுபட்டவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், மேற்படிப் பகுதிகளில் உள்ள காணிகளில் விவசாயக் கூலிகளாகக் வேலை செய்து தற்சமயம் வேலைகளை இழந்த குடும்பங்கள் போன்ற விபரங்களைத் தமக்குத் தந்துதவுமாறு யாழ் அரசாங்க அதிபர் வயாவிளான் பிரஜைகள் குழுவினரிடம் கேட்டுள்ளார்.

வயாவிளான் பிரஜைகள் குழு மேற்படி குழுத்தலைவர் திரு. சிறீ. நடராசா தலைமையில் யாழ் அரசாங்க அதிபரை நேற்றுச் (வெள்ளி) சந்தித்த போதே அரசாங்க அதிபர் மேற்படி வேண்டுகோளை பிரஜைகள் குழுவிடம் விடுத்தார். தற்சமயம் யாழ்ப்பாணப் பகுதிகளில் அகதிகளாக இருக்கின்ற மக்களுக்கு நிரந்தரமாக வசிப்பதற்கு அரசாங்கக் காணிகளைக் கொடுத்துதவ வேண்டுமெனவும் மேற்படி பிரஜைகள் குழு அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள்விடுத்தது.

அகதி மக்களுக்குக் காணி வழங்குவது சம்பந்தமாக ஆராய்வதற்காக யாழ் அரசாங்க அதிபர் குழு ஒன்றினை நியமித்துள்ளார்.

இக்குழுவில் யாழ், மேலதிக அரசாங்க அதிபர் திரு இராமநாதன், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. இராஜரட்ணம், திரு. வேல்முருகு, நில அளவை அத்தியட்சகர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ஐ)

# வவனியா வழமைக்குத் திரும்பியது

(வவனியா)

கடந்த செவ்வாய்க்கிழமை வவனியா கண்டி வீதியிலிடம் பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து வெறிச்சோடிக் கிடந்த வவனியா நகர் நேற்று முன்தினம் மீண்டும் வழமையான நிலைமைக்குத் திரும்பியுள்ளது.

பூட்டப்பட்டிருந்த கடைகள் திறக்கப்படடு வழமை போல் வியாபாரம் நடைபெற்றது. மக்கள் தம் அன்றாடக் கருமங்களையும் கவனித்து வருகின்றனர். [வ]

## அடிக்கல் நாட்டு வைபவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கிறீங்கிங்ஸ் விளையாட்டுக்கழகம் தனது புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை இன்று நாட்டவுள்ளது

யாழ் மேற்றாசனத்தினால் இலவசமாக மத்யூஸ் வீதியில் வழங்கப்பட்ட காணியில் இப்புதிய கட்டடத்தைக் கட்டவுள்ளது. இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் யாழ். ஆயர் டாக்டர் தியோகுப்பிள்ளை நாட்டுவார். சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே சிவஞானம் கலந்துகொள்கின்றார். அடிக்கல் நாட்டு வைபவம் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (வி)

## கல்லடியில் பதற்றம்

(மட்டக்களப்பு)

கல்லடியிலுள்ள ஆயுதப் படையினரின் முகாமிலிருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்ததால் அப்பகுதி நேற்று முன்தினம் பெரும் பதற்றத்துக்குள்ளானது.

காத்தான்குடியைச் சேர்ந்த ஊர்காவல் படையினருக்கு, கல்லடி ஆயுதப்படையினரின் முகாமில் துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சி இடம்பெற்றதே இத் துப்பாக்கிச்சூட்டுச் சத்தத்திற்குக் காரணமென நம்பப்படுகிறது [மா]

## தபால்கள் யாவும் எரியுண்டன!

[யாழ்ப்பாணம்]

கடந்த 25ம் திகதி ஓமந்தையில் நடந்த சம்பவத்தில் எரிக்கப்பட்ட ரயிலில் இருந்த தபால்கள் அனைத்தும் எரிக்கப்பட்டுவிட்டதாகத் தபால் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

கடந்த 22, 23, 24ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து பட்டுவாடா செய்யப்பட்ட சகலவிதமான தபால்களும் எரியுண்டதாகக் கூறப்படுகின்றது.

## மலையக மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரம்

[கிளிநொச்சி]

மலையக மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் அத்து மீறிக் குடியேறிய அனைவருக்கும் காணி அனுமதிப் பத்திரம் கிடைக்கவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெயநாதனின் பெருமுயற்சியால் பாரதிபுரத்தில் வசித்து வரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட மலையகக் குடும்பங்கள் காணிச் சொந்தக்காரராகும் சந்தர்ப்பமேற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாரதிபுரம்கிராம முன்னேற்ற சங்க தலைவர் மா. கணபதிக்கு காணிஅதிகாரி அறிவித்தல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதில் காணிக்கச்சேரி மூலம் தெரிவானோரின்பெயர்ப் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளது பலவழிகளிலும் பின் தங்கிய நிலையிலுள்ள பாரதிபுரத்தில் பதினாலாயிரம் மக்கள் வசிப்பது குறிப்பிடத்தக்கது.


கருங்கேசத்துடன்
இளமைத் தோற்றத்திற்கு
பீகொக்
ஜப்பானில் இருந்து இறக்குமதி
செய்யப்பட்ட தரமான தயாரிப்பு




விலை ரூபா 45/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றாண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்:

ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்

25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

Computer Programming
and
Data Processing Course
(BASIC LANGUAGE)
6 MONTHS

Week-end classes by qualified and experienced panel of lectures.

Commencement:- 27th April, 1986 at 10-00 a. m.

Fees:- Rs: 1500/- (தவணைமுறையிலும் செலுத்தலாம்.)

60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals.

Ideal for those who seek employment abroad.

குறிப்பு:- வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில் நடைபெறும்.

அச்சடித்த பாடக்குறிப்புகள் தமிழிலும் வழங்கப்படும்.

CANTABIA INSTITUTE
(Pioneers in Computer Education)
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(A353) தொலைபேசி: 24201.

BRITE SOAP
WASHES BRIGHT




Net Weight: 130 Grams Price: Rs. 2-25

கைதேர்ந்த தொழிலாளர்களால்
விஞ்ஞானமுறைப்படி தயாரிப்பவர்கள்
TURBOW COMMERCIAL - ALAVEDDY
★ ★ ★ ★
பிரகாசமான சலவைக்கு
பிறைற் சோப்
[A 239]

★ டானியல் நினைவஞ்சலி

# வரலாற்றைப் படைத்த நீ வரலாறு ஆகிவிட்டாய்

டானியல் தஞ்சாவூரில் காலமாகிவிட்டாராம்.

டானியல்...... இதுநான் உனக்கு எப்பொழுதோ எழுத வேண்டிய கடிதம்.

உனது நாவல்களைப் பற்றிய கட்டுரை பிந்தப்பிந்த உன்னைக் காணுவதென பின் போட்டு, கட்டுரையுடன் சந்திப்போம் என்று சுயதேறுதல் சொல்லிக்கொண்டிருந்த பொழுது நீ இந்தியா பயணமானாய்......

இப்பொழுது இந்தச்செய்தி கைலாஸ், இப்பொழுது நீ டானியல்......

வரலாற்றைப் படைத்த நீ இன்று வரலாறாகிவிட்டாய்.



உன்உடல் சட்சி அலுவலகத்தில் வைத்தே எடுக்கப்பட்டது.

டானியல்...

கப் பாரம்பரியத்தின் இருண்ட பகுதியை நீ வெளிச்சம்போட்டுக் காட்டியவன்.

அசனுல் உன்னைப்பலர் விரும்பவில்லை.......

ஆனுல் நீயோ உனக்குத் தெரிநத அந்த உண்மையினை மறைக்கத் தயாராக இருக்கவில்லை.... அந்த ஒரு இலக்கிய நேர்மைக்காகத்தான் அந்த நேர்மையின் டைப்புச் செழுமைக்காகத்தான் நீ இன்று இலககிய வரலாற்றுப் புலவனாகியுள்ளாய்.

நீயும்... வேறுசில எழுத்தாளத் தோழர்களும் மழுக்க மறுத்த எமது மனச்சாட்சியின் குரல்கள்... இலக்கியம் மனச்சாட்சியைத் தெளிவுபடுத்தும் சாதனம். அதனுல்தான் உனது இலக்கியப் நின்று நிலைக்கப்போகிறது டானியல். உன்னைப்பபற்றி விரிவாக எழுத வேண்டும். உன்னைப்பற்றி எனக்குத் தெரிந்ததையெல்லாம் எழுதிவிட வேண்டும். உன்னுடைய நடையில் இந்தத் தோழமையில் தனிப்பட்ட இறுக்கமான சிநேகம் மாத்திரமல்ல, எமது இலக்கியவரலாற்றின் சில முக்கியமான அடிக்குறிப்புக்களும் உள்ளன. அதைச்சொல்ல வேண்டியது என் பணி... கடமை. இலக்கயப்பொறுப்பு.

டானியல்... நீ என்றுமே உனது கருத்துக்களை விட்டுக் கொடுத்தவன் அல்ல அரசியலில் நாங்கள் இருவரும் ஒரே வண்ணத்தின் இருகோடுகள். எது கெட்டியானதென்பது பற்றி எத்தனை தடவை சண்டையிட்டிருப்போம். ஆனுல் அந்தச் சண்டைகள் எம்மை மேலும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டதே தவிர பகைமையை வளர்க்கவில்லை. உனது இலக்கிய நேர்மையை உணர்ந்தவர்கள் என்றுமே உன்னேடு பகைக்கமுடியாது.

நீ ஒரு நல்ல நண்பன். அற்புதமான படைப்பாளி.

படைப்பாளிகள் மறைவதில்லை. ஏனெனில் அவர்கள் தாங்கள் விரும்பும் உலகத்தை தங்கள் எழுத்துக்களில் வென்றெடுத்து விடுபவர்கள். நீ அழிக்க விரும்பிய உலகம் உன் எழுத்துக்களில் உள்ளது. அது விரைவில் அழிந்துவிடும். டானியல்.

உன்புகழ் எழும்.

நீ நிச்சயமாக வாழ்வாய்

### கார்த்திகேசு சிவத்தம்பி

உன் மறைவால் நாங்கள் படும் வேதனை உனக்குத் தெரியும். தோழமையையுணர்ந்த உனக்கு எங்கள் உணர்ச்சி புரியாதுவிடாது.

அந்த வேதனைக்குள் தாங்கமுடியாத சோகத்தினுள், நன்கு இனம்பிடிபடாத ஓர் இறுமாப்பும் தலைதூக்குகிறது எங்கள் டானியல் மரணத்திலும் எழுத்தாளனுகவே கௌரவிக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டான் மற்றையோர் மரணம் குடும்பச் சடங்கு நண்பர்கள் செலுத்தும் இறுதி அஞ்சலி ஆனுல் உனது மரணமோ, உனது வாழ்க்கையைப் போல, இலக்கியநிகழ்வு, வாசகர் கையறுநிலை தஞ்சாவூரில் நீ மறைந்தபொழுது நாவலாசிரியன் என்பதற்காகவே போற்றப்பட்டாய். 'நீ ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவன்' என்பதற்காகவே உனக்கு அந்த இறுதிச் சிறப்பு...

நீ பிடித்த சிவப்புக்கொடி இறுதிவரைஉன்னைவிடவில்லை. உண்மையில் எத்தனை நாட்கள் தேற்றிக்கொள்கிறோம். உனது மறைவு எமக்கு ஒரு பேரிழப்பு.

அண்மைக்காலத்தில் நீ எமது மிக முக்கிய நாவலாசிரியனுக முகிழ்த்துக் கிளம்பினுய்...

நீண்டகாலப் போராட்ட அனுபவம், மனித உறவுகள் பற்றிய எண்ணத்தெளிவு, வரலாற்றின் போக்குப் பற்றிய மார்க்ஸீய விளக்கம். உனது அண்மைக்கால நாவல்களை' ஈழத்தின் தலைசிறந்த நாவல்களாக ஆக்கிக்கொண்டு வந்தன. கதைப்பின்னலுக்கு அப்பால் நிற்கும் மனிதஉறவுச் சிக்கலை, உனது இறுதிநாவல் கானல்நீர் மிகச்சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

உனக்குத்தெரிந்த யாழ்ப்பாண வாழ்க்கை, யாழ்ப்பாணத்தவர் மறைக்கவிரும்பும், மறுக்கவிரும்பும் யாழ்ப்பாண வாழ்க்கை. சைவத் தமிழ்ப் பாரம்பரியம் மிக்க கவனத்துடன் கட்டியெழுப்பிய சமூ

## வாழிய இயேசுபிரான்!

இன்று உயிர்த்தஞாயிறு; பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் ஞாயிறனறு உயிர்த்தபோது பாவத்தில் இருந்த மங்கை மேரி மத்தலேனுவிற்கு முதலில் காட்சியளித்தார்.

தேவனுல் இப்பெண்மணி பாவம் தீர்ந்து திருந்தினுள்; அதற்கு இயேசுவின் அன்பே காரணம் என்று விவிலியவேதம் குறிப்பிடுகிறது.

''நாடுவிளங்கிட வீடுதுலங்கிட நலலவர் பாவிகளும், கேடுமறைந்திட கீழ்நிலைமாறிட கேட்டதும் ஓடிவரும்!''

''மண்ணிடை இயேசுமறுபடி வருவார்
என்பது சத்தியமே!
புண்கள் இருக்குமவரையில் மருந்து
தேவை நித்தியமே'' என்கிறது
இயேசுகாவியம்.

இந்தமருந்து தெய்வத்தையும் மனிதனையும் நேசிப்பதால் உண்டாகும் அன்புமயம்.

இதனை நினைவுறுத்தும் இந்த நன்னுள் குதூகலத்துக்குரியநாள்; அதனைக் கொண்டாடும் முறை எங்கள் நாட்டின் பண்பட்ட வாழ்க்கைக்கு உகந்ததாயிருக்க வேண்டும்.

உயிரைக்கொன்று அதன் ஊனை உண்டு மதுவை அருந்தி மயக்கமுற்றுப் பெறும் இன்பம், இன்றைய துன்பத்தை விளக்கவல்லது.

## யேசு நம்பியும் உயிர்த்திட்டானே!

குரக்கினத்தரசால் யேசு
கொலையுண்டே புதைக்கப்பட்டார்
அரக்கரின் அட்டகாசம்
ஆரம்பக் கட்டந்தானே!
சரக்கென விலகிற்றம்மா
சாத்திய கல்லும்கூட!
நரக்சழிவு எடுத்தயேசு
நம்பியம் உயிர்த்திடானே.

பாதல மரணம் என்ற
படுக்கைவிட்டெழுந்த யேசு
பூதல மீதுவந்தே
உயிர்த்திட்ட புதுமைபாரீர்!
ஆதவன் உதயம்போலும்
அருள்ஒளி வண்ணம் பாரீர்!
வேதநாயகனும் யேசு
வெற்றியை வியப்போம் வாரீர்

புண்ணியம், பழிக்கப்பட்டும்
பொய்த்தீர்ப்புக் கூறப்பட்டும்
கண்ணியம் இன்றிக் கொண்ட
ஆடையே களையப்பட்டும்
பண்ணிய கொடுமையாலே
படுத்தது மூன்று நாளே
உண்மைபின் உயிர்த்ததம்மா!
உலகெங்கும் நிலைத்ததம்மா!

திட்டம்போட்டுயிரைக் கொண்ட
தீயவர்தானே மாண்டார்!
பட்டான் என்று எண்ணப்பட்டோன்
பகலவன் போலே மீண்டான்!
'தட்டுங்கள் திறக்கும்' என்று
தமிழ்சொன்ன யேசுமீட்டும்
வட்டியும் முதலுமாகி
வையத்தே உயிர்ந்திட்டானே

— சத்தியசிலன்.

# மீட்பின் நாயகன் உயிர்த்தனன் எமை மீட்க

இன்று உயிர்த்த ஞாயிறு விடுதலையின் பெருவிழா. இருளின் ஆட்சி தோல்வி கண்ட தினம், மீட்பின் முரசு பேரொலி எழுப்புகிறது. எமது விசுவாசத்திற்கு உறுதி மொழி கிடைத்துவிட்டது.

கிறிஸ்துவின் வாழ்வு ஒரு நிறைவான வாழ்வு. பிறப்பு-வளர்ச்சி - சேவை - இறப்பு -உயிர்ப்பு இத்தனையும் கொண்டதுதான் கிறிஸ்துவின்வாழ்வு. இது தான் புதிய பாஸ்கா பண்டிகை, திருகடப்பு விழா, விடுதலை விழா இதுதான். எமது மீடபின் காவியம். இந்த விடுதலையின் விழாவைக் கொண்டாடி மகிழ்கின்ற எம்மிடையே பிணைக்கப்பட்ட

### பி. ஆர். சிவந்தன்

விலங்குகள் தகர்க்கப்பட்டு விட்டனவா? உங்களை நீங்களே கேட்டுப்பாருங்கள்.

உண்மைக்குச் சான்று பகர்வது கிறிஸ்தவம். குற்றமுணர்ந்து மன்னப்புக் கேட்பவனுக்கு மட்டுமல்ல, பகைவரையே மன்னிப்பது கிறிஸ்தவம், அநீதிக்கு எதிராகக்குரல் கொடுப்பது கிறிஸ்தவம். நிலையான சமாதானத்தினை உருவாக்க முனைவதுகிறிஸ்தவம். கிறிஸ்தவனுக வாழ்பது எவ்வளவு கடினமானது; சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்து தன் வாழ்வையே உடைத்துப் பிய்த்துக்கொடுத்தார். மனித இனம் வாழ, நானும் - நீங்களும் வாழ, கிறிஸ்து வழி காட்டினுர். நாமும் அவ்வழி நடப்போம்.

உண்மை கசந்தால் உண்மையை மறைக்கமுனைகிறோம். அன்றேல் அதனை சுட்டிக் காட்ட துணிவின்றி ஓடிஒளிக்கப் பார்க்கிறோம்,

எமக்கெதிராக இல்லாதது பொல்லாததுகளைச் சொல்லும் பொழுது, அவற்றைப் பரப்பும் பொழுது அவர்களை மன்னிக்க மறுக்கின்றோம்.

சுமந்து கொண்டு என் பின்னுல் வராதவன் விடுதலை அடைய முடியாது எனவே, எமது தாழ்வு மனப்பான்மையிலிருந்து நாம் விடுதலை அடைய வேண்டும். தீயபழக்க வழக்கங் ளுக்கு அடிமையாகாது விடுதலை அடைய வேண்டும். நாகரிகம் என்ற போர்வையில் வரும் அநாகரிகப்



சுயநலன்களுக்காக - சுயமதிப்புகளுக்காக மற்றவர்களைப் பழிவாங்கிப் பலியாக்கும் போது பழிக்குப் பழிவாங்கத் துடிக்கிறோம்.

நாங்களே குற்றவாளிகளாக இருப்பதுமல்லாமல் மற்வர்களையும் அநியாயத்தீர்ப்புக்குள்ளாக்குகின்றோம்.

இப்படிப்பட்ட சூழல்களிலிருந்து நாம் விடுதலை பெற வேண்டும். கிறிஸ்து கூறியது போன்றுதான் சிலுவையைச் போக்கிலிருந்து நாம் விடுதலை அடைய வேண்டும். காலத்திற்கேற்ற கோலம் என்று எமது சொந்தச் சிந்தனையை அழித்து, எமது தனித்துவத்தை இழந்து போகும் கொடிய இன்றைய எமது சூழலிலிருந்து நாம் அனைவரும் விடுதலை அடைய வேண்டும். இதுவே உயிர்த்த கிறிஸ்து இன்றைய நாளில் எமக்குத் தரும் மீட்புச் செய்தி.

# வட்டி வருமானமும் புதிய வரி கழிப்பு முறையும்

நகருணை ஆனந்தன்

**வட்டி வருமானத்திலிருந்து வரி கழிக்கும் ஒரு புதிய முறை ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல் படுத்தப்படவிருக்கின்றது இதன் பின்னணி யாது; எப்படி நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது; எவ்வகையானவர்களுக்கு விதிவிலக்கு மற்றும் வரிவிதிப்புக்கு உட்படும் வைப்பாளர் செய்யவேண்டிய கடமைகள் யாவை என்பதை விபரிக்கின்றார் இக்கட்டுரையாளர்.**

சகல நிலையான வைப்புக்களிலிருந்தும் பெறப்படும் வட்டி வருமானத்திலிருந்து 1-4-86 தொடக்கம் 20 சதவீதம் வரி கழிக்கப்படும் என்ற அண்மைய பத்திரிகை அறிவித்தல் சிறிய, நடுத்தர முதலீட்டாளர் மத்தியில் பல சந்தேகங்களையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தி உள்ளது. இந்த யோசனையானது நிதி மந்திரியின் 1985 வரவு செலவுத் திட்ட உரையின் போது பாரிய வரிநழுவலை (evosion) தடை செய்ய எடுக்கப்பட்ட முயற்சியின் ஓர் அங்கமாக வெளியிடப்பட்டது. எழுந்த மானமாகப் பார்க்கும் போது இலங்கை வரி அமைப்பில் இது ஒரு புது முறையாகத் தென்பட்டாலும், உண்மையில் ஏற்கெனவே நடைமுறையிலுள்ள ஒரு தத்துவத்தின் நீடிப்பேயாகும். அதாவது பங்குலாபமும் பங்குலாப வரி கழிப்புமாகும்.

இதுவரை பங்குலாப வருமானத்திலிருந்து வரிகழிப்பு எப்படி நடைபெறுகின்றது என்பதை முதலில் கவனிப்போம் கம்பனிகள் தங்கள் லாபத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பங்குலாபம் பிரகடனப்படுத்தியவுடனேயே பங்குலாபவரியாக 20 சதவீதத்தைக் கட்டாயக் கழிவாகக் கழித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய கடப்பாடு இருந்து வருகின்றது. பங்குதாரர் வருமானவரி கட்டுபவராக இருந்தாலும் சரி இலல்லாவிட்டாலும் சரி இக்கழிவு சகலருக்கும் கிடைக்கும் பங்குலாபத்திலிருந்து கழிக்கப்பட்டு வருகின்றது. உண்மையில் சில நூறு ரூபாய்கள் மட்டுமே பங்குலாபமாகப் பெறும் அநேகர் வரியிறுப்பாளர்அல்லாதகாரணத்தினால் (27,000 ரூபாவிற்கும் குறைவான வருமானம் பெறுவோர்கள்) தங்கள் மீளளிப்பிற்காக வருமானவரித் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துக் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வரியிறுப்பாளராக உள்ள ஏனையோர் தங்கள் மொத்த வருமானத்திலிருந்து எழும் வரியிலிருந்து முன்னதாகவே செலுத்தப்பட்ட பங்குலாப வரியைக்கழித்தபின் மிகுதியை அவ்வாண்டுக்குரிய வரியாகக் கட்டுகின்றார்கள்.

மேற்படி வரிகழிக்கும் முறையை வரிநழுவலைத் தடுக்கும் ஒரு படியாக நிதி மந்திரி இந்த வரிஆண்டு தொடக்கம் வட்டி வருமானத்திற்கும் விதித்துள்ளார். வரி ஒப்புதல் (Compliance மிகுந்து காணப்படும் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே வட்டியிலிருந்து வரிகழிக்கப்படும் இம்முறை பல ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில நிலையான வைப்புக்களில் முடங்கியிருக்கும் பணத்தின் அளவு மூவாயிரம் கோடி ரூபாய் என அளவிடப்பட்டிருக்கின்றது. எனினும் அம் முதலீட்டால் ஊற்றெடுக்கும் வட்டி வருமானத்தில் இருந்து கிடைக்கும் வரி-அறவிடல் திருப்தி காரணமாக இருப்பதாகத் தெரியவில்லை. அதேநேரம் நிலையானவைப்புக்கள் வைத்திருக்கும் முதலீட்டாளர்களொடு பங்குலாபம் பெறுவோரை ஒப்பிட்டுக் பார்க்கும் போது முன்னைய வர்க்கத்தினர் பலமடங்கு விஞ்சியுள்ளதாகத் தெரிகின்றது. எனவே இவ்வரி கழிப்பு முறையைப் பாகுபாடற்ற வகையில் யாவருக்கும் பொதுவாகப் பிரயோகித்தால் ஆக்கபூர்வமற்ற இடர்ப்பாடுகளும் தேவையற்ற செலவினங்களுமே சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஏற்பட இடமுண்டு.- முதலீடு செய்யும் பொது மக்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகியவை.

இதன் காரணமாகவே நிதி மந்திரி அவர்கள் இம்முறையை வளைந்து கொடுக்கக்கூடிய வகையில் அமுல்படுத்த வேண்டும் என்ற தொனியில் தனது உரையை நிகழ்த்தியுள்ளார். அவர் கூற்றுப்படி நிலையான வைப்புச் செய்யும் ஒவ்வொருவரும், ஏற்கெனவேமுதலீடுசெய்தவர்களும் பின்வரும் விபரங்களைத் தத்தமது வங்கிக்கோ நிதி நிறுவனத்திற்கோ தாமாக, உறுதி உரையாய் வெளிப்படுத்த வேண்டும்.

(1) பெயரும் விலாசமும்.
(2) தேசிய அடையாள அட்டை இலக்கம்.
(3) வரியிறுப்பாளரா, வரியிறுப்பாளர்அல்லாதவரா.
(4) வருமானவரிக் கோவை இலக்கம் எதாவது இருப்பி
5) வைப்பு இலக்கம்.

மேலும் அவர் தனது உரையில் ஒரு முதலீட்டாளர் தாம் ஒரு வரியிறுப்பாளர் அல்ல என வெளிப்படுத்துவாராயின் அவருடைய வட்டியிலிருந்து வரிக்கழிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்று வங்கிக்கோ, நிதிநிறுவனத்திற்கோ அறிவுறுத்தல் வழங்கப்படும் என்று கூறியுள்ளார். இப்படிச் செய்வதனால் குறைந்த வருமானம் உடையவர்கள் தமது வட்டியிலிருந்து கழித்த வரியின் மீளளிப்பிற்காக உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திற்கு விண்ணப்பித்துக் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழாது. அதே நேரம் இந்த உறுதிப்பாட்டை ஒரு முதலீட்டாளர் குறித்த தவணைக்கு முன் வெளிப்படுத்தத் தவறினால் அவர் வரியிறப்பாளர் அல்லாவிட்டாலும் அவரது வட்டி வருமானத்திலிருந்து வரிக்கழிவை ஏற்படுத்தி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வங்கியோ, நிதிநிறுவனமோ அனுப்ப வேண்டும் என்று அண்மையில் இறைவரி ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எனவே ஒவ்வொரு முதலீட்டாளரும் தத்தம் நலன் கருதி இவ்வுறுதி உரையைத் தமது வங்கிக்கோ நிதிநிறுவனத்திற்கோ 1-4-86 க்கு முன்னர் அனுப்புவாராயின் பலபின் விளைவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். வரி வருட முடிவில் - அதாவது 31-3-87 இன் பின் வங்கிகளோ நிதிநிறுவனங்களோ தமது வைப்பாளருக்குப் பின்வரும் விபரங்கள் அடங்கிய சான்றிதழை வழங்குவார்:-


(1) மொத்த வட்டி வருமானம்.

(2) வரிக்கழிவும், வீதமும்.

வரியிறுப்பாளர்கள் இச் சான்றிதழைத் தமது வருமான வரிப் படிவங்களுடன் இணைத்து அவ்வருட வரிக்

(8-ம் பக்கம் பார்க்க)

# ஹலியின் வால்வெள்ளி விடைபெறுகிறது!



டபிள்யூ. எஸ். செந்தில்நாதன்


ஒரு கருவியின் உதவியுமில்லாமல் நமது புலக்கண்களால் விண்ணில் பார்க்கக்கூடிய பொருள்களில் வால்வெள்ளிகளே மிகவும் அபூர்வமானவையாகும். திடீரென இவைகள் வானிற்தோன்றுவதும் இவற்றின் அசாதாரண பாதைகளும் இவற்றின் விசித்திரமான உருவங்களுமே இவற்றை ஏனைய வான் பொருட்களிலிருந்தும் வேறுபடுத்துகின்றன.

வால் வெள்ளிகளின் உற்பத்தியும் அவற்றின் தன்மையும் இன்னுந் தெளிவாகத் தெரியாதிருந்தாலும் சூரிய குடும்பத்தின் ஏனைய உறுப்புகளாகிய கிரகங்களின் அசைவு விதிகளுக்கு இவையும் அமைந்தே அசைகின்றன. எனினும் கிரகங்களின் அசைவுக்கும் இவற்றின் அசைவுக்கும் சில வேறுபாடுகள் உள. முதலாவதாக, கிரகங்களின் பாதைகள் நீள்வட்ட வடிவமானவை. அநேகமான வால்வெள்ளிகளின் பாதைகளும் இவ்வடிவத்திலேயே உள்ளன. ஆனால் சிலவற்றின் பாதைகள் பரவளைவாகவும் சில ஹைபர்வளை வாகவும் உள்ளன. நீள்வட்டமான பாதைகளுள்ள வால்வெள்ளிகள் குறிப்பிட்ட காலங்களின் பின் மீண்டும் மீண்டும் தோன்றும். ஏனைய பாதைகளையுடையன ஞாயிற்றுத் தொகுதியைவிட்டுச் சென்று பின் திரும்பி வரா. இரண்டாவதாக, கிரகங்களின் பாதைகளெல்லாம் ஏறக்குறைய ஒரே தளத்திலே இருக்கின்றன. வால்வெள்ளிகளின் பாதைகள் வெவ்வேறு தளங்களில் அமைந்திருக்கின்றன.

இப்படிப் பல்லாயிரக்கணக்கான வால் வெள்ளிகள் ஒவ்வொரு வருடமும் எமது சூரியனைச் சுற்றிச் செல்கின்றன. கடலில் எத்தனை மீன்களிருக்கின்றனவோ அத்தனை வால் வெள்ளிகள் வானில் உள்ளனவென்று பதினாறும் நூற்றுண்டில் வாழ்ந்த கெப்பர் என்னும் ஜெர்மன் விஞ்ஞானி கூறியுள்ளார்.

எத்தனையிருந்தாலும் இந்த ஹலியின் வால் வெள்ளியைப் போல வேறொன்றும் இவ்வளவு பரபரப்பை உண்டாக்கவில்லை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக 75 — 76 ஆண்டுகளுக்கொருமுறை தவறாமற்தோன்றுவதும் இதன் தோற்றங்களுக்கிடையேயுள்ள நீண்ட இடைவெளியும் 1910 ம் ஆண்டில் கடைசியாக இது தெரிந்தபோது மிகவும் பிரமாதமாக, அதாவது வானில் மூன்றிலொரு பகுதி நீளத்தைக் கொண்டதாக இருந்ததுமே இவ்வளயு பரபரப்பை உண்டாக்கியுள்ளது. எனவே இம்முறை அதன் வரவை எல்லாநாட்டு மக்களும் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு அதுகாட்சியளிக்காததனால் ஏமாற்றமுமடைந்துள்ளனர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் குறைந்தது முப்பது தரம் தோன்றியுள்ள ஹலியின் வால் வெள்ளி இம்முறையே இவ்வளவு மங்கலாகக் காட்சியளிக்கிறது. கி. பி 1066-ம் ஆண்டிலே இது மிகவும் பெரிய, எல்லோரும் பிரமிக்கக்கூடிய உருவத்துடன் தோன்றிற்று.

சென்றவருடம் ஐப்பசி மாதமளவில் இடபராசியிற் தோன்றிய இவ்வால் வெள்ளி சிறிது சிறிதாகச் சூரியனை நோக்கிச் சென்று பெப்ருவரி 9-ம் திகதி மகரராசியிற் சூரிய அண்மை நிலையை அடைந்து பின் சூரியனை விட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறது. இப்போது தனுராசியிற் காணக்கூடியதாகவுள்ள இவ்வெள்ளி இன்னும் இரண்டு தினங்களில் விருச்சிகத்துட் பிரவேசிக்கும். ஏப்றல் மாதம் 11-ம் திகதி இது பூமிக்கு மிகவும் அண்மையில் இருக்கும். அதன்பின் இது மிகவும் விரைவாகச் சென்று ஏப்றல் 20 ம் திகதி ஹைட்ரா என்னும் உடுத்தொகுதிக்குச் சென்று பின் அப்படியே மறைந்துவிடும். எனவே அடுத்த இரண்டு கிழமைக்கே இது வெறுங்கண்ணாற் பார்க்கக்கூடியதாகவிருக்கும். வால் வெள்ளியில் மூன்று பகுதிகள் உள்ளன. மூதலாவது கரு அதனைச் சுற்றிக் கோமா உள்ளது. சூரியனை அணுகும் போது இதற்கு ஒரு வால் உண்டாகும். கருவானது ஒரு சில கிலோ மீற்றர் விட்டத்தையுடையதென்றே கருதப்படுகின்றது. இது கோமாவுக்குள் மறைந்துகிடப்பதால் கோமாவை ஊடுருவிச்சென்று இதனை ஆராய்வதற்காகவே ஐரோப்பிய விண்வெளி ஏஜன்சியினால் ஜியோட்டோ என்னும் கலம் அனுப்பப்பட்டது. அனுப்பும்போது இது திரும்பி வருமென்று எதிர்பார்க்கப்படவில்லை இதுவே சில நாட்களுக்குமுன் செயலிழந்து விட்டதென அறிவிக்கப்பட்டது. இதைவிட ரஷ்யாவினால் அனுப்பப்பட்ட வேகா-I மார்ச் ஆறாந் திகதியும் வேகா-II மார்ச் ஒன்பதாந் திகதியும் ஜப்பானினால் அனுப்பப்பட்ட பிளானட் ஏ, எம். எஸ். ரி 5 ஆகியவை மார்ச் எட்டாந்திகதியும் இவ்வால்வெள்ளிக்கு மிகவும் அண்மையிற் சென்று அங்கிருந்து நேரடியாகப் பூமிக்குப் படங்களை அனுப்பிக்கொண்டிருக்கின்றன. இக்கலங்கள்யாவும் ஒரு வருடத்துக்கு முன்னரே பூமியிலிருந்து அனுப்பப்பட்டவையாகும்,



# பிரெஞ்சுமொழி ஓர் உலக மொழி

✶ ஊரெழு
க. முத்துக்குமாரசாமி

இன்று சர்வதேசமொழி எது என்ற கேள்வி கேட்கப்படுமாயின சாதாரண மக்கள் முதல் கல்விமான்கள்வரை ஆங்கிலமே சர்வதேசமொழி எனத்தயங்காமல் பதிலளிப்பர். இதை மறுப்பதற்கில்லை. எனினும் இன்றைய நவீன உலகில் பிரெஞ்சு மொழி வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்ற ஒரு உலக மொழியாகவிளங்குகிறது என்பதனைப் பலரும் அறியாதிருக்கின்றனர்.

பிரெஞ்சுமொழி பிரான்சில் மட்டுமன்றி ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா ஆபிரிக்கா முதலிய கண்டங்களில் உள்ள பல நாடுகளில் தேசிய மொழியாகவும், சிறுபான்மையினரின் மொழியாகவும் பயிலும் மொழியாகவும் விளங்குகின்றது. இன்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வர்த்தகம், விஞ்ஞானம், அரசியல், கைத்தொழில், விண்வெளி ஆய்வு முதலிய துறைகளில் ஈடுகொடுக்கக்கூடிய மொழியாகத் திகழ்கிறது. இருநூறு மில்லியன் மக்களால் நாளாந்த விடயங்களில் இம்மொழி பாவிக்கப்படுகின்றது.

12-ம், 13-ம் நூற்றுண்டுகளில் ஐரோப்பாவின் கத்தோலிக்க நாடுகளில் லத்தீன் மொழியே உத்தியோக மொழியாக விளங்கியது. பிரெஞ்சு மொழி இரண்டாம் இடத்தையே வகித்தது. இங்கிலாந்தில்கூட நோமன் ஆட்சியிலிருந்து பதினைந்தாம் நூற்றுண்டு வரை பிரெஞ்சு மொழியே ஆட்சி மொழியாய் இருந்தது. பின்பு நாலாவது ஹென்றி அரசர் காலத்தில் ஆங்கிலம் ஆட்சி மொழியாகியது.

16ம் நூற்றுண்டு காலத்திலிருந்து பிரெஞ்சு நாட்டுக் கடலோடிகள் பல்வேறு நாடுகளுக்கும் செல்லத் தொடங்கினர். இக் காலகட்டத்தில் கனடா, வடஅமெரிக்கா, இந்திய உபகண்டம் முதலியவற்றில் தங்கள் ஆதிக்கத்தைநிலைநாட்டத் தொடங்கினர் பின்பு 18ம் நூற்றுண்டில் ஐரோப்பிய யுத்தங்களினுல் தாம் கைப்பற்றிய பல இடங்களை பிரெஞ்சு இழக்க நேரிட்டது. 19ம் நூற்றுண்டின் இறுதிக் கட்டத்தில் பிரான்ஸ் ஆசிய ஆபிரிக்கக் கண்டங்களில் தனது குடியேற்றத்தை வெற்றிகரமாக அமைத்துக் கொண்டது. இக்காலகட்டத்தில் பிரெஞ்சுமொழி குடியேற்ற நாடுகளில் தனதுஆதிக்கத்தைப் பலப்படுத்திக் கொண்டது. முதலாவது உலக யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்த வார்சைல் ஒப்பந்தம் கூட ஆங்கிலத்திலும் பிரெஞ்சு மொழியிலும் வரைந்து கைச்சாத்திடப்பட்டது. 1945ல் ஐக்கியநாட்டுச் சபையில் ஆங்கிலத்திற்குச் சமமான அந்தஸ்தை பிரெஞ்சு மொழி பெற்றதுடன் தனது உலக அந்தஸ்தையும் நிலைநிறுத்தியது. பிரான்ஸில் பிரெஞ்சுமொழி அரசகரும மொழியாகவும் பயிலும் மொழியாகவும் இருப்பதில் வியப்பில்லை. ஆனல் பிரான்ஸ் நாட்டின் பூகோள எல்லையைக் கடந்து பிரெஞ்சு மொழி பெற்றிருக்கின்ற அந்தஸ்தினைக் கவனிப்போம்.

## பெல்ஜியம்

பிரெஞ்சுப் புரட்சியின் பின் பிரெஞ்சுமொழியே அரசகரும மொழியாய் அமைந்தது. எனினும் 1872. 1898, 1980, 1983ம் ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினுல் இன்று பெல்ஜிய சமஷ்டி அரசியல் அமைப்பில் பிரெஞ்சுமொழியுடன் டச்சு, ஜேர்மன், பிளமிஷ் ஆகியமொழிகளும் பெல்ஜியத்தில் அரசகரும மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன.

## சுவிற்சலாந்து

தலைசிறந்த சமஷ்டிஅரசியலமைப்பை ஏற்றுக் கொண்ட இந்நாட்டில் நான்கு தேசிய மொழிகள் உள்ளன. பிரெஞ்சு மொழி, ஜேர்மன், இத்தாலிய மொழிகள் அரசகரும மொழிகள் அந்தஸ்தையும் ரோமான்ஜ் மொழி தேசிய அந்தஸ்தையும் பெற்றுள்ளன. 60 லட்சம் குடிசனத் தொகை கொண்ட இந்நாட்டில் ரொமான்ஜ் மொழி பேசுபவர்கள் 500,000 க்கும் குறைவாகவே உள்ளனர் எனினும் இம்மொழி தேசியமொழி அந்தஸ்துப் பெற்றுள்ளது. சுவிற்சலாந்து இன்று வரை ஐ. நா. வில் அங்கத்துவம் கோரவில்லை. 160வது அங்கத்தவ நாடாகச்சேர வாய்ப்பிருந்தும் இந்த அமைதியான நாட்டு அழகான மக்கள் உறுப்புரிமை வேண்டாமென நிராகரித்து விட்டார்கள். எனினும் ஐ. நா. நிறுவனங்களான சர்வதேச தொழில் ஸ்தாபனம், உலக சுகாதார ஸ்தாபனம், சர்வதேச அகதிகள் கமிஷன் ஆகியன இங்கே நிலைகொண்டுள்ளன, அத்துடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமை அலுவலகமும் இங்கேதான் செயல்படுகிறது. ஜெனிவா நகரில் செயலாற்றும் இத்தனை அமைப்புக்களிலும் பிரெஞ்சு மொழி நன்ருகப் பயன்படுத்தப்படுகின்றது.

## இத்தாலி

இத்தாலி நாட்டோடு இணைக்கப்பட்டுள்ள அயோஸ்ரா பள்ளத்தாக்கில் இத்தாலிய மொழியுடன் பிரெஞ்சு மொழியும் அரசகரும மொழியாகச் செயற்படுகின்றது. 150.000 மக்கள் மட்டுமே பிரெஞ்சு மொழியைப் பேசுபவர்களாயிருந்த போதிலும் அரசகரும மொழி அந்தஸ்தோடு ஆட்சிபுரிகிறது பிரெஞ்சுமொழி.

## கனடா

16ம் நூற்றுண்டில் பிரெஞ்சு மக்கள்வந்து இங்கு குடியேறத் தொடங்கினர், 1931ல் கனடா ஆதிபத்திய உரிமை உள்ள நாடாகக் கணிக்கப்பட்டது. பத்துமாநிலங்கள் உள்ள கனடா சமஷ்டிக் குடியரசில் மூன்று மாநிலங்கள் பிரெஞ்சுமொழி ஆட்சிக்குட்பட்டவைகளாகும். 1967ம் ஆண்டு இயற்றப்பட்ட மொழிச்சட்டத்தின் கீழ் ஆங்கிலமும் பிரெஞ்சு மொழியும் சம அந்தஸ்துடைய அரசகரும மொழிகளாயின. கனடா சமஷ்டியில் உள்ள பத்து மாநிலங்களும் கல்வி, மொழி சம்பந்தமான சட்டங்களை இயற்ற உரிமைபெற்றிருக்கின்றன. இவற்றில் பிரெஞ்சு மொழிபேசும் பெரும்பான்மை கனடா மக்களைக் கொண்ட கியூபெக் மாநிலம் இருமொழிக் கொள்கையை ஒதுக்கி பிரெஞ்சு மொழியை மட்டுமே தனி அரசகரும மொழியாக 1977ல் பிரகடனம் செய்தது. கியூபெக் மாநிலத்தின் தனிப் பிரெஞ்சுமொழிச் சட்டம் பிரசித்திபெற்ற LAW 101' என அழைக்கப்படும். இச்சட்டத்தின்கீழ் ஆங்கிலத்திற்கும் சில விசேட சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் இருமொழிச் சட்டவாக்கம் இருந்த பொழுதிலும் மாநிலஅரசு ஒன்று ஒரு தனிமொழிச்சட்டத்தை இயற்றக்கூடிய சுதந்திரமுள்ள சமஷ்டி அரசியல் சட்டத்தைக் கொண்ட கனடா அரசியலமைப்பு போற்றப்பட வேண்டியதே. 25 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந் நாட்டில் 6·5 மக்கள் மட்டும் பிரெஞ்சுமொழி பேசும்மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்காவில் பிரெஞ்சுமொழி பேசும்மக்கள் நியூ இங்கிலாந்து, லூசியாஞ ஆகிய இரு மாநிலங்களிலுமே பெரும்பான்மையாக வாழுகிருர்கள். 1968ல் லூசியாஞ மாநிலத்தில் ஆங்கில, பிரெஞ்சு மொழிகளுக்குச் சட்டமூலம் சம அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கின்றது. ஆரம்ப இடைநிலைப்பாடசாலைகளிலும் பிரெஞ்சு மொழி கற்பிக்கப்படுகின்றது. சிறிய அளவிலேனும் அமெரிக்காவில் பிரெஞ்சுமொழி சட்டபூர்வ அந்தஸ்துடன் செயல்படுகின்றது.

## ஹெத்தி (HATTI)

1492ல் கொலம்பஸினுல் கண்டுபிடிக்கப்பட்ட இந்நாடு, ஸ்பானிய ஆதிக்கத்திலிருந்து 1697ல் பிரான்சின் ஆதிக்கத்திற்குட்டது. 1804ல்சுதந்திரம் பெற்ற இந்நாடு பிரெஞ்சு மொழியை அரசகரும மொழியாக ஏற்றுக்கொண்டது.

## லத்தீன் அமெரிக்கா

தென்அமெரிக்காவில் உள்ள அநேகமான நாடுகளில் பிரெஞ்சுமொழி பரவலாகப் பேசப்படுகின்றது. ஆர்ஜன்டீஞ, பிறேசில், மெக்சிக்கோ, பஞமா, சல்வடோர் முதலிய நாடுகளிலும் மேற்கத்திய தீவுகளில் சிலவற்றிலும் பிரெஞ்சு மொழி பேசப்படுகின்றது.

# இங்கிலாந்தில் பதினைந்தாம் நூற்றுண்டு வரை பிரெஞ்சுமொழியே ஆட்சியிலிருந்தது

## ஆபிரிக்கா

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள பன்னிரு நாடுகள் இன்றும் பிரெஞ்சு மொழியையே அரசகரும மொழியாகக் கொண்டிருக்கின்றன. அவை யாவன; பெனின், பர்கிஞ வாசோ, மத்திய ஆபிரிக்கக் குடியரசு, சாட், கொங்கோ, கபன், கினியா, ஐவரி கோஸ்ற், மாலி, நைகர், செனகல், ரோகோ. இன்னும் புருண்டி, கமரோன், கொமரேஸ், திபோத்தி, மடகஸ்கார், மொரிற்ருனியா. ருவன்டா, செயிச்செல்ஸ், சயர் ஆகிய நாடுகளில் பிரெஞ்சு இணை அரசகரும மொழி அந்தஸ்தினைப் பெற்றிருக்கின்றது. இத்துடன் மாறிசியஸ் தீவில்கூட பிரெஞ்சு மொழி அதிகமாகப் பேசப்படுகின்றது. அங்குகுடியேறிய தமிழர்கள்கூட பிரெஞ்சு மொழியையே பேசுகிருர்கள்.

வட ஆபிரிக்காவில் உள்ள மொரொக்கோ, அல்ஜீரியா, ரியூனிசியா ஆகிய நாடுகளில் இன்றும் பிரெஞ்சு மொழி பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன. அராபியத்தேசியம் இன்று நிலைகொள்ளத் தொடங்கிவிட்டபொழுதிலும் சர்வதேசத் தொடர்புகளுக்கும், விஞ்ஞானச் செயல்பாடுகளுக்கும் பிரெஞ்சு மொழியே கைகொடுத்து உதவுகின்றது.

## மத்திய கிழக்கு

எகிப்து, சிரியா, லெபஞன் முதலியநாடுகளிலும் பிரெஞ்சு மொழி இன்றும் செல்வாக்குடன் திகழ்கிறது. எகிப்தில் பிரெஞ்சுமொழிப் பாடசாலைகள் இயங்குகின்றன. அத்துடன் பல மாணவர்கள் தமது உயர்கல்விக்கு பிரெஞ்சு மொழியையே தமது முதலாவது அயல்மொழியாகத் தேர்ந்தெடுத்துப் பயிலுகிருர்கள். சிரியா, லெபஞன் போன்ற நாடுகளில் உள்ள சர்வகலாசாலைகளிலும் இன்றும் பிரெஞ்சு மொழிகற்பிக்கப்

(8-ம் பக்கம் பார்க்க)

# எண்ணுவரோ மீண்டும் உறவை?

வேணும் விளையுமென்று மிச்சசொச்சம் வைக்காது
தோணும் படியே துணிவோடு — ஆணவத்தில்
அந்நியரே செய்யவஞ்சும் அக்கிரமம்! செய்யயலோர்
எண்ணுவரோ மீண்டும் உறவை?

கொஞ்சக் கொலையா செய்கொடுமைக்கோர் எல்லையுண்டா
குஞ்சு குழந்தை இளம்பெண்ணும் — எஞ்சாமல்
கொன்று குவித்துக் கொளுத்தி விளையாடுவதை
என்று மறக்குமினி ஈழம்?

எந்தவிதத் தீர்ப்பை இவ்வழக்குப் பெற்ருலும்
இந்த இனமிரண்டும் ஒட்டாது — முந்தினபோல்
நட்புறவாய் வாழ்தலினி நடக்காது! ஈழத்தோர்
சுட்டமண்ணுய்ப் போனுர்கள் தீய்ந்து!

'தன்ஞல், தனது பரிசனத்தால், கள்வரால்
ஒன்ஞரால், தீய உயிர்களினுல் — மன்னுயிர்க்கு
ஆனபய மைந்தும்தீர்த் தறங்காத் தருள்வோனே!
மாநிலத்தைக் காக்கின்ற மன்.

தெய்வத் தமிழ்வல்ல 'சேக்கிழார்' இங்ஙனம்நாம்
உய்ய அருள்நூலில் ஓதுகின்ருர் — ஐயகோ
ஈழத் திருநாட்டை இதிலுயர்ந்த தார்மீகம்
ஆள்வதின்று காணு ரவர்.

— அல்லை க. வ. ஆறுமுகம்

# இலக்கியச்சந்தி

✶ யாழ்வாணன்

## அறிவு வட்டம்

எழுத்தாளர்களினதும், இலக்கிய ஆர்வலர்களினதும் பொது அறிவை விசாலிக்க உதவும் நோக்குடன் அறிவு வட்டம் எனும் புதிய அமைப்பொன்றினை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பில் ஏற்படுத்தியுள்ளது. அறிவுவட்டத்தின் செயற்திட்டம் பின் வருவாறு அமைந்துள்ளது.

★ சமூகம், பொருளாதாரம், அரசியல், உளவியல், வரலாறு விஞ்ஞானம் மற்றும் துறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களின் உரையரங்குகளை மாதா மாதம் நடாத்துவது.

★ இந்திய வம்சாவளியினர் பிரஜாஉரிமை, சர்வதேச மாதர் தினம், தேசிய இனப்பிரச்னை, சுதந்திர வர்த்தகவலயம், அணிசேரா இயக்கம், திறந்த பொருளாதாரம், பல்தேச இணையங்கள், உலக சுகாதாரப்பிரச்னைகள், வளர்முகநாடுகளின் நிலைமைகளும் வளர்ச்சி மார்க்கங்களும், ஆயுதப் பரிகரணம், வெகுஜனத் தகவல் சாதனங்களும், மேற்கத்திய ஏகபோகமும், தமிழ்சமுதாய மாற்றங்கள் முதலாம் பொருள்கள் பற்றிய உரைகளையும், உரையாடல்களையும் ஏற்பாடுசெய்வது.

★ வரலாறு, பொருளியல், உளவியல், தொழில்வளர்ச்சி இயற்கைவளங்கள், விவசாயம், சாதியமைப்பு, சீதனம், உட்பட சமூக அறிவியல் பிரச்னைகளைப் பறறிய ஆய்வுகளை நடாத்துவது.

## நூல்வெளியீடு

சமூகத்தில் இன்று நிலவும் அமைதியின்மை, பயப்பிராந்தி, மரணபயம் ஆகியவற்றிறகிடையேயும் நம் எழுத்தாளர்களில் சிலர் தமது இலக்கிய ஆக்கங்களை நூலுருவில் வெளியிடும் முயற்சியில் முனைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

கோப்பாய் சிவத்தின் குறுநாவல் நேற்று முன்தினம் வெளியானது.

சசிபாரதி, செம்பியன் செல்வன், கவிஞர் வே. குமாரசாமி, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, க. பாலசுந்தரம், புலவர்வே. கனகசபாபதி, திருமதி கோகிலாமகேந்திரன் ஆகியோரது ஆக்கங்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

## மல்லிகை

மல்லிகை மார்ச் மாத இதழ் ஓவியர் மார்க்கின் புகைபடத்தை முகப்புப்படமாகக் கொண்டு வெளிவந்துள்ளது.

இவ்விதழில் சி. மௌனகுரு நிச்குவலைகமால், சுதாராஜ், தெணியான், புதுவை இரத்தினதுரை உட்பட பலரது ஆக்கங்கள்வெளியாகியுள்ளன.

டாக்டர் எம். கே. முருகானந்தம் அவர்களின் கடிதம் வாசிப்போரின் உள்ளத்தை நெருடுகின்றது. பொதுமக்களின் அனுதரவான நிலையை அவலநிலையை நிதர்சனமாகக் கோடிட்டுக் காட்டுகிறது.

# குறுநாவல்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## 2

ஏழு வருடங்களுக்கு முன்பு வசந்தமலர் வசந்தகாலத்து வனப்புள்ள மலர்ச்செடியாக விளங்கினுள். பாவாடை தாவணியில் பருவத்தின் வனப்புக்களை மறைத்து அதனுல் தானும் தடுமாறி மற்றவர்களையும் தடுமாறவைக்கும் நல்ல அழகியாக விளங்கினுள்.

வசந்தகாலம் வருடத்தின் சில மாதங்களில் தான் தனது வனப்பினை காட்டியது. ஆனுல் வசந்தமலரோ பருவகாலத்தின் எழில் சிட்டாக சிறப்பாக மிளிர ஆரம்பித்தாள்.

அந்த சந்தர்ப்பத்தில் தான் அவளுக்கு கந்தமூர்த்தியின் சினேகிதம் கிடைத்தது. அது வெறும்சினேகிதமாக இருக்காமல் நாளடைவில் தீவிரமான காதலாக மாறியது.

காதலில் இருவரும்எவ்வளவு தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார்களோ அதேபோல அவர்களின் காதல் விடயம் வெளியுலகத்துக்கு தெரியவர ஆரம்பித்தது.

ஊரில் உலாவும் கதைகளை முதலில் கேள்விப்பட்ட வசந்தமலரின் பெற்ருேர் மகளை வாயினுல் கண்டிக்க ஆரம்பித்தார்கள் ஆனுல் வசந்தமலருக்கு அந்தக்கண்டிப்பு ஒரு பொருட்டாகதென்படவில்லை. ஆனுல் காதலின் தீவிரம்தான் அதிகமாகியது.

கந்தமூர்த்திக்கும் இதே நிலைமைதான் ஏற்பட்டது. நான்கு பெண்களுக்கு ஒரு ஆணுக பிறந்துவிட்டுவேலையில்லாமல் கண்டபடி திரிந்த அவனை... உருப்படியான சொத்து ஏதுமேயில்லாத இடத்தில் பெண் எடுக்க அவன் பெற்ருேர்கள் எப்படி விரும்புவார்கள். தங்களிடம் இருக்கும் நான்கு குமர்களுக்கும் பெறுமதியாக கந்தமூர்த்தியை எண்ணியிருந்தார்கள். அதனுல் கந்தமூர்த்தி இப்படி குறுக்கே பாய்வதை அவர்களால் அனுமதிக்கமுடியவில்லை.

அதே நிலைமையில்தான்வசந்தமலரின் பெற்ருேர்களும். ஏற்கனவே வசந்தமலருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களுமாக ஐந்து சகோதரங்கள் இருந்தார்கள். வசந்தமலரையும் அவளது ஒரு தமக்கையையும் தவிர ஏனையவர்கள் திருமணமாகி இருந்தார்கள்.

வசந்தமலருக்கு மூத்தபெண்ணெருத்தி இருக்க வசந்தமலர் இந்த காதல்விடயத்தில் இறங்கியதும் அதோடு வேலை ஒன்றும் இல்லாமல் அவர்கள் கணிப்பின்படி விடுகாலியாக திரிந்த கந்தமூர்த்தியை காதலிப்பதையும் அவர்கள் ஏற்கவில்லை. ஏற்கனவே கஷ்டமான நிலையில் உள்ள குடும்பத்தில் பிறந்து கஷ்டத்தை அனுபவிக்கும் வசந்த மலர் மேலும் கஷ்டப்படுவதை அவளது பெற்ருேர்கள் விரும்பவில்லை.

பெற்ருேர் வாயினுல் கண்டிப்பதை தொடர்ந்து அவர்களின் காதல் தொடர்பில் இரகசியம் உருவானது. இரகசியமாக அவர்கள் சந்திக்கின்ருர்கள் காதல் தொடர்புகளில் ஈடுபட்டுஉள்ளார்கள் என்பது வசந்தமலரின் பெற்ருேருக்கு தெரியவரவே கண்டிப்பு அதிகமாக வாய்ப்பேச்சோடு கண்டபடி கையில் அகப்பட்ட பொருட்களால் அடிக்கும் அளவுக்கு நிலைமை மாறியது.

இவற்றில் அதிக அக்கறை காட்டியது திருமணமாகாமல் இருக்கும் வசந்தமலரின் மூத்த சகோதரிதான். வயது போகின்றநிலையில்தான் இருக்க தன்னைவிட வயது குறைந்த வசந்தமலர் காதலில் ஈடுபடுவது அவளுக்கு வெறுப்பினைத்தந்து வசந்தமலரின் மேல் பொருமையை ஊட்டியது.

நெருக்கடியான நிலைமைகளிலும்கூட வசந்தமலர் காதலன் நினைப்பில் பூரித்திருப்பதும் தனிமையில் இனிமை காண்பதையும் அவதானித்த வசந்தமலரின் சகோதரிக்கு வசந்தமலரின் மேல் ஆத்திரமும் ஏற்படலாயிற்று

அதன் காரணமாக வசந்தமலரைப் பற்றியும் அவளது நடவடிக்கைகள் பற்றியும் அவள் வெகு உன்னிப்பாக அவதானித்து அதனை பெரிதுபடுத்தியும்கூட சில விடயங்களை சேர்த்தும் தாய் தகப்பனுக்கும் ஏனைய சகோதரர்களுக்கும் கூறலானுள். அதனுல் வசந்தமலரின் நிலை மோசமாகியது.

கந்தமூர்த்தியின் தொடர்பு ஏற்பட்டு ஒருவருட காலத்துக்கிடையிலேயே இப்படியாக மோசமான நிலை ஏற்பட அதனைத் தாங்கமுடியாமல் வசந்தமலர் கஷ்டப்பட்டாள். வீட்டில் அவளால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. எல்லோரும் சீறிச் சினந்துகொண்டும் அடித்துக்கொண்டும் இருக்கையில் அவள் சஞ்சலத்துக்கு ஆளானுள்.

ஆனுல் எப்போதாவது கந்தமூர்த்தியைக் காணும்போது தான் வீட்டில்படுகின்ற துன்பங்களுக்கும் வேதனைகளுக்குமான ஓர் நிறைவினைப்பெறுவாள். அவனின் ஆதரவு அவளுக்கு அப்படியான நிலைமைகளில் அவசரமாக தேவைப்பட்டது. அதன் காரணமாக கந்தமூர்த்தியின் மேல் இருந்த காதல் புதிய வலுப்பெற ஆரம்பித்தது.

ஒருவருடகால காதலில் எவ்வளவு இடர்பாடுகளை அனுபவித்ததின்காரணமாககாதலில் ஒரு விதமான வெறி வசந்தமலருக்கு ஏற்படலாயிற்று.

அந்தவெறி காரணமாக ஒரு நாள் கந்தமூர்த்தியுடன் வீட்டைவிட்டு யாருக்குமே சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டாள் வசந்தமலர். வாழ்க்கையில் பல சோதனைகளை அனுபவித்ததன் பலனுக அவள்உறுதியும் துணிவும் பெற்ருள். அதனுல்தான் உழைப்பே இல்லாத கந்த மூர்த்தியை நம்பி ஏனையோருக்கு சவாலாக வாழ்ந்து காட்டுகிறேன் என்ற உணர்வுடன் வீட்டைவிட்டு வெளியேறிய வசந்தமலர் ஏனையவர்களுக்கு ஓடிப்போனவள் ஆனுள்.

யாருமே எதிர்பார்க்காத நிலையில் அவள் கந்தமூர்த்தியுடன் வெளியேறியதால் வழக்கமான கூப்பாடுகளும் திட்டுதல்களும் கந்தமூர்த்தி வீட்டிலும் வசந்தமலர் வீட்டிலும் உருவாகின.

வசந்தமலர் வீட்டுக்காரர் கந்தமூர்த்தி குடும்பத்தினரையும் கந்தமூர்த்தி வீட்டுக்காரர் வசந்தமலர் குடும்பத்தையும் கண்டபடி விமர்சித்து ஒரு பகுதியை மற்றப்பகுதி தூற்றத் தொடங்கியது. வசந்தமலரின் இந்த செய்கையினை அவனது பெற்ருேர்களைவிட அவனது சகோதரர்கள் ஏதோ பெரிய செய்கையாக வர்ணித்தார்கள். சமுதாயத்தின் மேல் மட்டத்தில் தாங்கள் வாழ்வதாகும் இந்தக் காரியத்தில் மீளமுடியாத அவமானத்தில் அவர்கள் சிக்கி மானம் போய் சந்தி சிரிக்கும் அளவுக்கு வந்துவிட்டதாகவும் அவர்கள் நினைத்தார்கள்.

ஆண் சகோதரர்கள் தாங்கள் பெண்எடுத்த இடத்திலும் தங்கள் மனைவியருக்கும் முக்கிய இடம் கொடுத்ததால் அவர்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டவர்கள்.

''உங்கள் தங்கையை இனியும் நினைத்துப் பார்ப்பீர்களா''

''வெளியில் தலைகாட்ட முடிய வில்லை.''

''உப்பிடியும் ஒரு பொம்பிளை இருக்கிறதே.''

உப்பிடி ஓடிப் போறதை விட நஞ்சு குடிச்சு சாகலாம்'' என்று அவர்கள் செய்த விமர்சனங்களை ஆண் சகோதரர்கள் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டார்கள்.

எங்களைப் பொறுத்தவரை எங்கள் தங்கை ஓடிப்போன அன்றே செத்துப் போய் விட்டாள். இனி செத்த வீடு தான் கொண்டாட வேண்டும்.'' என ஆண் சகோதரர் கூறினுர்கள்.

ஆக மொத்தத்தில் வசந்தமலரின் ஆண் - பெண் சகோதரர்கள் ஒன்றுகூடி தங்கள் கடைசித்தங்கைஇறந்து போய் விட்டாள் என தீர்மானம் எடுத்து அதனை அமுல்நடத்தினுர்கள்.

வசந்தமலர் பாவித்த பொருட்கள்படுத்த பாய் தலையணை எல்லாம் அக்கினிக்கு இரையாக்கி வெகு சுலபமாக தங்கள் தொடர்புகளை முடித்துக் கொண்டார்கள்.

ஏதோ ஒருவெறியில் வசந்தமலரும் கந்தமூர்த்தியும் தங்கள் வாழ்க்கைப பாதையினை அமைத்தப் பின்னர் தான் யோசித்தார்கள் அந்தப் பாதையில் பிரயாணம் செய்வது சுலபமான காரியம் அல்ல என்பது.

கொஞ்ச நாட்கள் சில தூரத்து உறவினர்கள் செய்த உதவியினுல் தங்கள் பொழுதைக் கழித்தாலும் வருமானம் இல்லாத நிலையில் கஷ்டத்துக்கு ஆளாகி இறுதியாக கடை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தான் கந்தமூர்த்தி

உதவி புரிந்த தூரத்து உறவினர்களில் ஒருத்தரின் உதவியினுல் சிறு வீடு ஒன்றில் தங்கள் சாம்ராச்சியத்தை அமைக்க தீர்மானித்தனர். அந்த வீட்டுச்கு மாதா மாதம் சிறுதொகை தருவதாக ஒப்புக்கொண்டதன் பேரில் அந்த வீட்டில் குடிபுகுந்தனர்.

நெஞ்சில் பிறந்து விட்ட உறுதியும் தங்களை வேடிக்கையுடன் பார்க்கின்ற உலகத்தவர்கள் முன்னிலையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற துணிவும் அவர்களுக்கு கைகொடுக்க அவர்கள் வாழ ஆரம்பித்தார்கள்.

எத்தனை நாட்களுக்கு வாழப் போகின்ருர்கள் கஷ்டப்பட அவளைவிட்டுவிட்டு அவனே அல்லது அவளோ பிரியத்தான் போகின்ருர்கள் என்று எல்லோரும் கதைப்பதைக் கேட்க கேட்க எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சிறப்பாக வாழத்தான் வேண்டும் என்று அவர்கள் உறுதி பூண்டார்கள்.

அதனுல் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அதைப்பொறுத்து வாழப் பழகிக்கொண்டார்கள். அந்த சின்னஞ்சிறு கொட்டில் வீட்டில் ஆசை ராஜாவாக அவனும் அன்பு ராணியாக அவளும் இருக்க அந்த வளவில் இருந்த மரங்கள் - வசித்த பறவையினங்கள் கட்டியம் கூற அவர்கள் உண்மையான உள்ளார்ந்தமான அன்புடன் ஆட்சி செய்த ஆரம்பித்தனர்.

ஒரு வருட வாழ்க்கையின் பயனுக அவர்களுக்கு சங்கரன் பிறந்தான். இப்போது கடையின வருமானம் போதாதிருந்தது. இருவராக இருந்தவாகள் மூவரானதால் எழுந்த செலவுகளை ஈடு செய்ய முடியாமல் பொருளாதார சிக்கல்களுக்கு உள்ளானுர்கள்.

ஒரு பிள்ளை பிறந்து விட்ட போதிலும் வெறும் கழுத்துடன் இருந்த வசந்தமலரினைக் காணும்போதெல்லாம் கந்தமூர்த்தியின் மனம் வெதும்பும்.

தங்கள் உள்ளத்தாலும் உடலாலும் சட்டத்தாலும் திருமணமானவர்கள் என்று இருந்தாலும் வெளியுலகத்துக்கு அடையாளம் தெரிவிக்கும் தாலிக்கொடியை வசந்தமலர் இன்னமும் அணியாதது அவன் வேதனைக்கு காரணமாக இருந்தது.

மனைவிக்கு ஒரு தாலிக்கொடி செய்யும் அளவுக்குக் கூட வழியில்லாத நிலையில் தான் இருப்பதை நினைக்கும் போது கந்தமூர்த்திக்கு வேதனை பன்மடங்காகும்.

இவ்வாருன பொளாதார பிரச்னைகள் மன வேதனைகள் காரணமாக எல்லோரும் யோசிப்பது போல வெளியால போனுல் என்ன? என்றயோசனை கந்தமூர்த்தியின் மனதில் எழுந்தது.

வாலிபவயதில் இப்படியான எண்ணம் மனதில் முளைவிட்டு இருந்தாலும் ஏனே அப்போது அக்கறைபிறக்கவில்லை. பிறகு வசந்தமலரின் தொடர்பால் அவளைவிட்டுபோக முடியவில்லை.

இப்போது

ஒரு நண்பனின் உதவியுடன் மிகுந்த கிரமப்பட்டு பிறரிடம் கடன் வாங்கி வெளிநாடு போவதற்கு ஏஜென்சிக்கு காசுகட்டினுன்,

வசந்தமலர்முதலில் விரும்பவில்லை ஆனுலும் பிறகுசம்மதித்தாள். கந்தமூர்த்தியும் மனைவி பிள்ளைகளை துணையில்லாமல் விட்டுப்போக சங்கடப்பட்டு ஏஜென்சி சொன்ன நாளில் பிளேன் ஏறி போனஇடத்தில் தான் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்துகண்ணீர் விட்டு அழமுடியாமல் வந்து சேர்ந்து


அதெல்லாம் பழங்கதை

வீட்டுக்கஷ்டத்தால் பல தொழில்கள் செய்யவேண்டியதாயிற்று

நாட்கள் வாரங்களாகி, மாதங்களாகி, வருடங்களாகி சங்கரனுக்கும் ஐந்து வயதாகி விட்டது. அந்த ஆறுவருடங்களுக்கும் கடுமையான உழைப்பின் காரணமாக கந்தமூர்த்தியின் உடல் வாலிபக்களை இழந்து விட்டது. உடல் உருக்குலைந்தாலும் உள்ளம் இன்னமும் உருக்குலையவில்லை.

சமீபத்தில்தான் தான் இதுவரைபட்ட கஷ்டங்களுக்கு பதிலாக தேர்வடம்போல இல்லாமல் மெல்லிய தாலிக்கொடி ஒன்றினை செய்து ஒரு நல்ல நாளில் முருகன் கோயிலில் ஐயர் ஆசீர்வதிக்க ஐந்து வயதுப்பிள்ளை ஆவலுடன் பார்க்க கந்தமூர்த்தி வசந்த

(8ம் பக்கம் பார்க்க)



# நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

## ஆகாயக் கோட்டை!

ஒரு பிரதம மந்திரி பொது மக்களுக்கு நன்மை விளைவிக்கும் திட்டங்களை வகுத்து அமுல் படுத்துவதன் மூலம் பெரும் புகழைத் தேடுவதில் ஆவலாக இருந்தார். ஆனுல் அவருக்கு உருப்படியான திட்டங்களை வகுக்கும் ஆற்றலோ அறிவோ எள்ளளவுமில்லை அவர் பெரிய திட்டங்களை வகுக்க வேண்டும் என்று எப்பொழுதும் கற்பனை செய்து கொண்டிருப்பார்.

பிரதமரின் பாராட்டையும் அவரிடமிருந்து சலுகைகளையும் பெறும் நோக்கத்துடன் ஒரு ஆலோசனை கூறவந்தான் ஒரு மனிதன்

''தலை நகரிலுள்ள பழைய ஏரியின்சேற்றை வாரியெடுத்து அதை ஆழப்படுத்தினுல் எண்ணூறு சதுரமைல் செழிப்பான நிலத்தைப் பெற முடியும். இதன் மூலம் மக்களிடமிருந்து பெரும்புகழை நீர் பெற முடியும்'' என்று அந்த மனிதன் கூறினுன்.

பிரதமருக்கு பெரு மகிழ்ச்சி

''ஏரியை ஆழப்படுத்து முன் அதிலுள்ள தண்ணீரை என்ன செய்வது?''

பிரதமர் கேட்டார்.

''பழைய ஏரியிலுள்ள தண்ணீரை வெளியே எடுத்து நிரபபுவதற்கு அதற்குப்பக்கத்தில் அதே அளவுள்ள ஒரு புதிய ஏரியை வெட்டினுல் பிரச்னை தீர்ந்துவிடும்''.

அந்த மனிதன் கூறினுன்.

அவனுடைய மூளைத்திறனை மெச்சிப்பாராட்டியதுடன் அத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டார் பிரதமர்.

★

## வாக்குறுதிகள்!

பணமுடை ஏற்பட்ட ஒருவன் தனது நண்பனிடம் தானிய உதவி கேட்டுச் சென்ருன். நண்பனே ஒரு பிரபு.

''நல்லது நான் விரைவில் நிலவரியை வசூலிக்க இருக்கின்றேன் அது வசூலித்து முடித்ததும் நூறு தங்கக்கட்டிகளைத் தருவேன். சரி தானே?''

பிரபு பெருமையுடன் கூறினுர்.

உதவி கேட்டு வந்தவனுக்கு கடும் வெறுப்பும் கோபமும் ஏற்பட்டது.

''நேற்று நான் இங்கு வரும் வழியில் என்னை யாரோ கூப்பிடும் குரலைக் கேட்டேன். நான் சுற்று முற்றும் பார்த்தபொழுது சாலையிலுள்ள ஒரு வறண்ட படுகுழியில் ஒரு நண்டு கிடப்பதைக் கண்டேன்.

''நண்டே நீ இங்கு எப்படி வந்தாய்?''

நான் வினவினேன்.

நான் கிழக்கேயுள்ள சமுத்திரத்தைச் சேர்ந்தவன். என்

(8-ம் பக்கம் பார்க்க)

# கலைமகள் கி. வா. ஜ. வுக்கு எண்பது ஆண்டுகள் நிறைவு

''முருகா என ஓதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவார் வியாதியடைந்துநையார்
ஒரு கால முந்துன்பமுறார் பரகதியுற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார் சமராபதிப்புண்ணியனே''

ஆம். முருக பக்தர்கள் அடையும் பேறுகள் எத்தனை எத்தனை! அத்தனையும் ஒரு சேரப்பெற்றவர் நமது கி.வா. ஜ. அவர்கள். செந்தமிழ்ச் செல்வர், திருமுறைச் செல்வர், பிரசங்க வாரிதி, இலக்கிய மேதை, இலக்கண வித்தகர், கலைமகள் ஆசிரியர் என்றெல்லாம் இயம்பி இயம்பி ஏத்திடும் பெருமை பெற்றவர் எங்கள் கி. வா. ஜ. அவர்கள்.

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

இன்று அவர்களுடைய எண்பதாவது ஆண்டு அனுஷ நட்சத்திரத்துடன் நிறைவு பெறுகிறது இந்த நன்னாளில் அவர்களை வாழ்த்தி வணங்குதல் தமிழ்ப் பெருங்குடி மக்களின் தலையாய கடனாகும். தமது பத்தாவது வயது தொடக்கம் இற்றைவரை அதாவது எழுபது ஆண்டுகளாக சைவத்துக்கும் தமிழுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பெருமை கி. வா. ஜ அவர்களுக்கு உண்டு. அவர்களுடைய காலடி படாத உலக நாடுகளே இல்லையெனலாம் நமது ஈழத்துக்கு இருநூறுக்கு மேற்பட்ட தடவைகள் வருகை தந்து நல்லுரையாற்றியும் மகாநாடுகளுக்குத் தலைமை தாங்கியும் ஆலயப் பெருவிழாக்களில் பங்கு கொண்டும் சிறப்பித்துள்ளார்கள். இதனாலேயே இவர்களுடைய மணிவிழா 1966-ம் ஆண்டில் யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

''நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யா நலத்துள்ளதூஉம் அன்று''

என்ற குறட்பாவுக்குப் பொருத்தமான நாநலம் மிக்க பெருந்தகையின் உரையைக் கேட்க வேண்டுமென்று ஓடோடிச் சென்ற கூட்டத்தினரில் யானும் ஒருத்தி. விடயமறிந்து மேடையறிந்து அவையறிந்து, அறிஞர் சபையறிந்து பேசுந்திறன் மிகுதியும் பெற்றவர் இப்பெரியார் என்று கூறுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். மனிதப் பிறவி யெடுத்த ஒரு சிலரே தெய்வமாக உயர்த்தப்படுகிறார்கள். அறிவும் திருவும் ஆற்றலும் நற்பண்புகளும் சேர்ந்துவிட்டால் அவையே மனித உயர்வுக்கு வழிவகுப்பனவாகும். அத்துடன் அருளும் சேர்ந்து விட்டால் வாழ்க்கை ஒளிவிட்டுப் பிரகாசிக்கத்தொடங்கி விடும். இதனாலேயே தமிழகத்துச் சான்றோர் வரிசையிலே ஐயாவுக்கு உரிய இடம் அற்புதமான பங்குக்குரியது மன்றி தமிழுள்ளங்களில் நிலைத்து நிற்பதுமாகும்.

''வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்றார் வள்ளுவர். வாழ்வாங்கு வாழ்தல் என்பது சமய நெறி நின்று உண்மையோடும் அன்போடும் வாழும் பண்புள்ள வாழ்க்கையாகும். உலகில் பலபேருடைய நினைப்பு இப்படிச் செல்வதில்லை. பொருளே நிலைத்தது. அதுவே தெய்வம் என்று நினைத்து விடுகிறார்கள்.



'பூரியார் கண்ணுமுள' என்று பொருளை ஒதுக்குகிறார் வள்ளுவர் ஆகவே பொருளை இழந்தாலும் அருளை இழக்காமல் பேணிக்கொள்ள வேண்டும். அதற்குக் குருவருளும் திருவருளும் துணை நிற்க வேண்டும். பெரியார் அவர்கள் இவை யிரண்டும் செம்மையாக வாய்க்கப் பெற்றவர். முருகனுக்கு வணக்கமும் குருவுக்கு வணக்கமும் சொல்லாமல் அவர்கள் எந்த உரையையும் ஆரம்பிப்பதில்லை. இந்தப் பண்பாடே அவர்களை நற்புகழின் உச்சிக்கு உயர்த்தி விட்டது என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

சமுதாயத்தைப் பாழாக்குவது சமயம் என்று ஒரு சில பகுத்தறிவளார் கூச்சலிட்டுத் திரிந்த ஒருநேரத்தில் சமயந்தான் சமுதாயத்தைப் பேணுகிறது என்று ஆணித்தரமாகத் தமது பேச்சாலும் எழுத்தாலும் வெளிப்படுத்தியவர் நமது பெரியார் அவர்கள்.

எந்தக் கடுமையான கருத்து விளங்காத செய்யுள்களையும் மிக எளிமையான முறையில் விளங்கவைக்கும் ஆற்றலில் இவர்கள் இணையில்லாதவர். செந்தமிழ் நடமாடும் திருநாவும் திருநீறுதவழும் திருநுதலும் கண்டாரைக் கவரவைக்கும் திருப்புன்முறுவலும் கருத்தாழத்தைக் காட்டும் கண்ணழகும், கதராடைக்கு அழகு கொடுக்கும் திருவேடமும் என்றும் எம்மனக்கண்ணை விட்டு நீங்க மாட்டாத சின்னங்களாகும்.

தமிழகத்துக்கு நான் செல்லும் காலங்களில் இவர்களின் ''காந்தமலை'' இல்லத்துக்குச் செல்வேன் பல தடவைகளில் ஒரு சில தடவைகள் மாத்திரம் அவர்களை இல்லத்தில் காண முடிந்தது ஒரு திருக்கோயிலாக முருகன் உறையும் ஆறுபடைவீடுகளில் இதுவும் ஒன்றோ என்று எண்ணத்தக்க தூய்மையும் எழிலும் அருட் பொலிவும் மிக்கதாக இவர்களின் இல்லம் காட்சி தந்தது. அத்துடன் இல்லத்தரசி அவர்களின் இன்னுரையும் விருந்தோம்பும் மாண்பும் தற் கொண்டாற் பேணும் தகைமையும் சொல்லுக்கடங்காத பெருமைகுரியன,

எனவே வீட்டிலும் நாட்டிலும் நற்புகழீட்டி நற்பணியாற்றி, தமிழன்னைக்கு நல் விருந்தளித்து சான்றோரை மதித்து, தக்கோரைப் போற்றி வாழ்ந்து வரும் வித்துவான் கி வா ஜ. அவர்களின் முத்து விழாவிலே யாழ்ப்பாண மக்கள் சார்பிலே ஈழத் தமிழ் மக்கள் பேரிலே நீர்வேலி சிவஸ்ரீ இராசேந்திரக் குருக்களின் குடும்பசார்பிலே வாழ்த்துகள் வழங்கி நிற்கிறோம், ஐயா அவர்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்ந்து செந்தமிழ் அன்னைக்குச் சேவை பல புரிய வேண்டுமென்று திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

# வட்டி வருமானமும்

[5-ம் பக்சத் தொடர்ச்சி]

கொடுப்பனவுகளிலிருந்து ஏற்கெனவே செலுத்தப்பட்ட வரியாகக் கழிப்பதற்கு இதனைப் பயன்படுத்தலாம். மொத்த வரியிலும் பார்க்க வரிக்கழிவு கூடுதலாக இருப்பின் மீளளிப்பிற்காக இறைவரித்திணைக்களத்திற்கு இச் சான்றிதழுடன் தம் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டி இருக்கும்.

தாம் வரியிறுப்பாளர் அல்ல என்று வெளிப்படுத்துவோரின் கூற்றுக்களைச் சரி பார்க்க உள்நாட்டு இறைவரித்திணைக்களம் கொம்பியூட்டர் (Computer) உதவியுடன் பின்னர் பரீட்சார்த்த பரிசீலனை செய்யும் வருமானவரி எல்லைக்கு மேற்பட்ட வருமானம் உடையவர்கள் இதுவரை வரியிறுப்பாளராகத் தம்மைப் பதிவு செய்யாதிருப்பின் அவர்கள் அந்தந்தப்பிராந்தியத்திலுள்ள இறைவரித் திணைக்களப் பணிமனையில் ஒரு புதியகோவையை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பிக்கலாம்.

இப்புதிய வரிகழிப்பு முறை மூலம் 1986/87 க்கு மேலதிக வருமானமாக இருபத்தைந்து கோடிரூபா பெறப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ள போதும் இன்னுமொரு வகையான வைப்பாளர்களை இக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தால் இதனிலும் பார்க்கக் கூடிய வருமானம் பெற்றிருக்கலாம்.

1. பின்வரும் வைப்புக்களுக்கு இவ்வரிகழிப்பு முறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

- ★ சகல தபாற்கந்தோர் சேமிப்புக் வங்கியிலுள்ள வைப்புக்கள்.
- ★ ஏனைய வங்கிகளிலுள்ள சேமிப்பு சணக்குகளில் ரூபா 100 00 கும் மேற்படாத தொகையுடைய வைப்புக்கள்.
- ★ வங்கி / நிதிநிறுவனங்களிலுள்ள ஏனைய நிலையான வைப்புக்களில் கூட்டு மொத்தமாக ரூபா 20,000 கும் மேற்படாத தொகைக் ம்.
- ★ விசேஷ இளம்பராயத்தினர் கணக்குகள். (முதிர்ச்சியில் 15 சத வீத வரிக்கு உட்படுத்தப்பட்டவை

எனவே மேற்குறிப்பிட்ட வைப்பாளர்கள் தங்கள் வங்கி நிதிநிறுவனங்களுக்கு குறித்த உறுதி உரையைவெளிப்படுத்த வேண்டிய அவசியமேற்படாதென்றே கொள்ள வேண்டும்.

2. மீளளிப்பு:

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு விண்ணப்பம் கிடைத்த மூன்று மாதத்திற்குள் மீளளிப்புச் செய்தாக வேண்டும். அன்றேல் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## எதுதான் எல்லை?

அலைவந்து மோதும் கரை கடலினெல்லை
ஆசை கு வாழ்வினிலோர் எல்லை இல்லை
சிலையாகிப் போவதுதான் மனிதனெல்லை
சீரழிந்த பாவியர்க்கோ அதுவுமில்லை!
விலையில்லை உயிர்களுக்கு விந்தையில்லை
விரிந்து வரும் மனிதமரக்காட்டில் எங்கும்
பூவில்லை பிஞ்சில்லை காயுமில்லை
அழிந்து விடும் வாழ்வினுக்கு எதுதான் எல்லை?

— இரா. மகேந்திரசிங்கம்.

## தாரகையாய் வாழ்ந்தாயே தாரணியில் டானியலே!

கொள்கைக் கொலுவிருந்து கூர்மை தனைவளர்த்து
உள்ளக் கருத்துகளை ஓதும் எழுத்துகளால்
அள்ளி வழங்கியநல் அன் பார்ந்த டானியலே
தெள்ளு தமிழ் மொழியாள் செந்தார கைமணியே!

செந்தார கைமணியாய்ச் செல்வாக்குப் பெற்றுயர்ந்த
நந்தா மணிவிளக்கே நாடறிந்த டானியலே
செந்தேன் மொழியெடுத்துச் சீரார்ந்த சித்திரங்கள்
தந்தாயே இந்தத் தலத்தினுக்குச் சாந்தி செய்ய

சாந்திநிறை வாழ்வு சமதர்மச் சக்தியென்றே
ஏந்தி வழிநடந்தாய் எத்தனையோ போர்தொடுத்தாய்
மாந்தருக்குள் சாதிபேதம் மாகொடிய நோயென்றே
தீந்தமிழிற் செப்பிச் சிறுகதைகள் செய்தாயே!

செய்தாய் சிறுகதைகள் சீர்நாவல் கட்டுரைகள்
மெய்யாய் மிளிர்வதனை மேலும் விளங்கவைத்தாய்
பொய்தேர் புரட்சிகளைப் புன்மைகளை போக்கும் நிறை
கையால் எழுதிவைத்தாய் காரியமார் டானியலே!

காரியத்திற் கேற்றபல காரணங்க ளைவிளக்கும்
தாரகையாய் வாழ்ந்தாயே தாரணியில் டானியலே
பெரிகையே பேண்புரட்சிப் பேச்சாளும் பெற்றியனே
தீரமுயர் செம்மணியே தேவனடி சேர்ந்தீரோ!

— கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை

## குறுநாவல்

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

மலரின் கழுத்தில் தாலி கட்டினான்.

என்னதான் வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட்டாலும் கழுத்தில் தாலி ஏறிய பின்னர் வசந்தமலர் ஓர் புதுமையான அனுபவத்தைப் பெற்றாள்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்று ஒரு மாதத்துக்குப்பின்னர் ஒரு நாளிரவு நெஞ்சுவலி என்று படுத்த கந்தமூர்த்தி பின் எழும்பவேயில்லை. மரணம் அவனை அரவணைத்துக்கொண்டது. தாலிபூண்டதால் கம்பீரம் அடைந்த வசந்தமலர் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை.

பிரேதமாக்கிடக்கும் கணவனின் காலடியில்துவண்டுகிடக்கும் அவளின் வாழ்க்கை கேள்விக்குறியாக காட்சி தருவதை அவள்அப்போது உணரவில்லை.

[வளரும்]

## பிரெஞ்சு மொழி

(6ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றது. மேற்படிப்பிற்காகவும் இந்நாட்டு மாணவர்கள் பிரான்சிற்கே செல்கின்றார்கள்.

### ஆசியா

பிரான்சின் குடியேற்ற நாடுகளாயிருந்த கம்போடியா, லாவோய், வியட்நாம் ஆகிய நாடுகளிலும் இன்றும் பிரெஞ்சு மொழியின் தாக்கம் காணப்படுகிறது. அத்துடன் பலர் இன்றும் இரண்டாவது மொழியாக பிரெஞ்சு மொழியைக் கற்கின்றார்கள்.

### இந்தியா

1674 ல்பாண்டிச்சேரி பிரான்சின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 1954 ல் இந்தியாவுடன் இணையும் வரை இங்கு தமிழுடன் பிரென்சு மொழியும் உத்தியோக மொழியாகச் செயற்பட்டது இன்றும் பிரெஞ்சு மொழியை இரண்டாவது மொழியாக விரும்பிக்கற்கிறார்கள்.

வல்லரசாத விளங்கிய நாடுகளிடம் சிறந்த கடலோடிகளும், வாணிபக்கப்பல்களும் இருந்த படியால் குடியேற்ற ஆதிக்கத்தின் மூலம் பல நாடுகளைத் தங்கள் ஆளுகைக்குக்கீழ் கொண்டுவந்தனர். வர்த்தகத்திற்கு வந்தவர்கள் மத மாற்றத்தில் ஈடுபட்டார்கள். பின்னர் நாடுகளையே ஆட்சிப் படுத்தினார்கள். அவர்களின் மொழியும், மதமும் கலையும் கலாசாரமும் குடியேற்ற ஆதிக்கம் அழிந்தபின்பும் நிலைத்திருக்கின்றன.

இந் நிலையில் கப்பல் ஓட்டிய தமிழனோ மொழியுமில்லை நாடுமில்லை என்ற நிலையில் அகதியாய் அலைகிறான். இது எங்கள் தவக்குறைவோ?

## நாடோடிக் கதைகள்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

உயிரைக் காப்பாற்றுவதற்கு உன்னிடம் ஒரு பீப்பா நீர் இருக்கின்றதா?''

நண்டு களைத்துச் சோர்ந்து கேட்டது

''சரி நான் கிழக்குத் தேசத்திலுள்ள இளவரசனிடம் மிக விரைவில் விஜயம் செய்ய இருக்கின்றேன். அவருடைய அனுமதி கிடைத்தவுடனே மேற்குத் தேசத்திலுள்ள ஆற்றிலிருந்து உனக்கு வேண்டிய நீரைத்தந்தால் சரிதானே

நண்டு வெறுப்புற்றது

''நான் வாழ்வதற்கு அத்தியாவசியமான நீரிலிருந்து அகற்றப்பட்டு விட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை ஒரு பீப்பா தண்ணீரால் என் உயிரைக்காப்பாற்ற முடியும், ஆனால் நீ எனக்கு வெறும் வாக்குறுதிகளை மாத்திரம் தருகின்றாய். நீ உதவத தவறினால் நீ என்னை மீன் சந்தையில்தான் காணமுடியும்''

நண்டு வேதனையுடன் கூறியது.

இதயமறறவர்களுக்கு எதைக் கூறினாலும் அவர்களுடைய மரமண்டையில் ஏறுமா?''

இக்கதையைக் கேட்ட பிரபு ஒன்றுமே தெரியாதவர் போல உதவி கேட்டு வந்த நண்பனைப் அலட்சிய பாவத்துடன் பார்த்தான்.

அவன் ஏன் இங்கு வந்தேன் என்று நினைத்தபடியே அவ்விடத்தை விட்டகன்றான்.

# ஈழத்தமிழிலக்கிய சஞ்சிகை வரலாற்றில் 'புதுசு'வின் பண்பும் பணியும்

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

ஓர் இலக்கிய சஞ்சிகை என்பது அது எழுதுகின்ற சமூகத்தின் பண்பாட்டம்சங்களின் குரலாகவும் பதிவேடாகவும் மட்டுமன்றிச் சமூக இயங்கியலின் இயக்க விசையாகவும் பணியாற்ற வேண்டிய கடப்பாடுடையதாகும். இக் கடப்பாட்டை உணர்ந்து செயற்படுவனவாக இன்று ஈழத்தில் வெளி வந்துகொண்டிருக்கும் இலக்கிய சஞ்சிகைகளில் ஒன்று 'புதுசு' 1980ஆம் ஆண்டிலே தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உயர்தர வகுப்பிற்பயின்ற இலக்கியத் தாகங்கொண்ட மாணவர் சிலரால் தோற்றுவிக்கப்பட்ட இச்சஞ்சிகை அவர்களால் [கல்லூரி வாழ்க்கையைக் கடந்தபின்னரும்] தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் இதுவரை எல்லாமாகப் பத்து இதழ்கள் வெளிவந்துள்ளன இச் சஞ்சிகை ஈழத்தின் சமகாலத் தமிழிலக்கியச் செல்நெறியை உருவாக்குவதில் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது; செய்து வருகின்றது. இப்பங்களிப்பை உரியவகையில் இனங்கண்டு கொள்வதற்கு ஈழத்துத் தமிழ் இலக்கியசஞ்சிகைகளின் வரலாற்றுப் பகைப்புலத்திற் 'புதுசு' வைப் பொருத்தி நோக்கவேண்டியது அவசியமாகிறது.

ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகை வரலாறு 1841 இல் வெளிவரத்தொடங்கிய உதயதாரகையுடன் தோற்றம்பெறுகிறது. எனினும் நவீன இலக்கிய உணர்வுடனன பத்திரிகை சஞ்சிகை வரலாறு 1930இல் வெளிவரத் தொடங்கிய ஈழகேசரி 1945இல் சில இதழ்கள் வெளிவந்துநிறைவுபெற்ற மறுமலர்ச்சி என்பவற்றிலிருந்தே தொடங்குகின்றது. முப்பதுகளின் தொடக்க ஆண்டுகளில் ஈழத்தில் முகிழ்த்த சமூக அரசியல் விழிப்புணர்ச்சியின் விளைவாக அரசியலை முன்வைத்து எழுந்த ஈழகேசரி முப்பதுகளின் இறுதியில் நவீன இலக்கியக்களமாகவும் பரிணமம் பெறலாயிற்று 1958இல் அது நிறைவுபெறும் வரை இந்நவீன இலக்கியப் பணிதொடர்ந்தது. ஈழகேசரி பண்ணையில் உருவான நவீன இலக்கியச்சிந்தனையாளர்களிற் சிலருடைய முனைப்பே மறுமலர்ச்சியாக மலர்ந்தது. தமிழகத்தில் மணிக்கொடி, கலாமோகினி, கிராமஊழியன் முதலிய சஞ்சிகைகள் உருவாக்கிய நவீன இலக்கிய சிந்தனைப் போக்கை சமகால ஈழத்தின் பிரதிபலித்த ஈழகேசரியும் மறுமலர்ச்சியும் ஈழத்தின்மண் வாசனையும் சமூக உணர்வும் கொண்ட படைப்புக்கள் உருவாவதற்கான முதற்கட்டப் பணியைப் புரிந்த பெருமைக்குரியன. ஈழகேசரி 1958இல் நிறைவுபெறும்வரை இப்பணியைச்செய்தது. 1960ஐ அடுத்துச் சிலகாலம் வெளிவந்த கலைச்செல்வி சஞ்சிகையும் இப்பணியைத் தொடர்ந்தது.

1950ஆம் ஆண்டை அடுத்து ஈழத்தின நவீன தமிழ் இலக்கியத்தில் இலக்கியத்தின் சமுதாயப் பணிபற்றிய சிந்தனையும் ஈழத்திற்கெனத் தேசியப் பண்பு வாய்ந்த இலக்கியம் உருவாகவேண்டுமெனறஉணர்வும் தோன்றி வளரலாயின. இச்சிந்தனைகள் முனைப்புப் பெற்ற காலப்பகுதியான அறுபதுகளின் நடுப்பகுதியில்(1965) மல்லிகை சஞ்சிகை தோன்றியது. அது மேற்படி சிந்தனைப் போக்குகளின் முக்கியகளமாகத் திகழ்ந்து தொடர்ந்து இருபதாண்டுகட்கு மேலாக அப்பணியை ஆற்றிவருகின்றது. மல்லிகைக்கு இரு ஆண்டுகள் மூத்ததும் அங்கதநேக்கில் தமிழில் வெளிவரும் ஒரேயொரு சஞ்சிகை எனற சிறப்புக்குரியதுமான சிரித்திரனும் மேற்படி சிந்தனைப் போக்குகளை இன்னொரு மட்டத்தில் பிரதிபலிக்கலாயிற்று இச்சிந்தனைகளைக் கருத்திற்கொண்டு எழுபதுகளின் ஆரம்பத்திற் பெருந்தொகையான சஞ்சிகைகள் தோன்றியபோதும் அவை தோன்றிய வேகத்திலேயே மறைந்தன.

அறுபதுகளின் நடுப்பகுதியில் முனைப்புப்பெற்று எழுபதுகளின் ஆரம்ப ஆண்டுகள் வரை தொடர்ந்த 'இலக்கியத்தின் சமுதாயப் பணி', தேசியப்பண்பு என்பன தொடர்பான சிந்தனைகள் எழுபதுகளின் நடுப்பகுதியிற் புதிய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. சமுதாயப் பணி எனப்படும் உள்ளடக்கம் தொடர்பானகருத்து நிலைக்கு கொடுக்கப்பட்டுவந்த முதன்மை காரணமாக கலையம்சம் எனப்படும் உருவம் தொடர்பான படைப்பாற்றல் உரியவகையில் வளர்த்தெடுக்கப்படவில்லை என்ற எண்ணக்கரு படிப்படியாக உருவாகி ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. படைப்பு என்ற பெயரில் எழுதி அச்சேறப் படுவதெல்லாவற்றையும் இலக்கியம் என ஏற்றுக்கொள்ளும் பொதுவான ரசனைப் பாங்கினின்று விடுபட்டுத்தரமானவற்றை மட்டும் இனங்கண்டு பேணிக் கொள்ளவும் திறனாய்வு செய்யவும் வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெறலாயிற்று தேசியம் என்ற பெயரிலே இலங்கைத் தீவு முழுவதையும் ஒரே நாடு ஆகக் கருதிவந்த அன்றைய முற்போக்கு இலக்கிய சிந்தனையாளர்கள் முனைப்புப் பெற்று வந்த சிங்களப் பெருந்தேசியவாதத்தின் முன் தம் கருத்து நிலை தளரத்தொடங்குவதைப் படிப்படியாக உணரத்தலைப் பட்டனர். இத்தகைய சிந்தனைமாற்றச் சூழல்களின் பிரசவமாக 1975 இல் அலை சஞ்சிகை தோற்றம் பெற்றது 'உண்மைக்கலை, இலக்கிய நேசிப்பையும் சத்தியநட்டத்தையும்,' கலை அனுபவ ளிவயீடாகத்தான் இருக்க முடியும். வெறுமனே கருத்துக்கள் மட்டும் கலையைச் சிருஷ்டிக்கப் போதுமானதாக இருப்பதில்லை என்ற கருத்தையும் அலை கொண்டிருந்தமையை அதன் முதலாவது இதழே சுட்டிநின்றது. அதற்கேற்பக் கவிதை, சிறுகதை, திறனாய்வு, கட்டுரை ஆகிய பல்வகைகளிலும் கலைத்தரமும் அழுத்தமான கருத்தோட்டமும் பேணிக் கொள்ளப்படலாயின. 1976 நடுப்பகுதியில் வெளிவந்த அலை 5வது இதழ் தமிழரின் தேசிய இனப்பிரச்னைக்குத் தலையங்க முக்கியத்துவம் கொடுத்தது. நாடு முழுவதற்குமான 'சோஷலிஸப் புரட்சி' ஏற்படும்வரை தமிழ் இனப்பிரச்னை தாமதிக்கப் படக்கூடியதல்ல. அதற்கு முன் விரைந்து தீர்வுகாணப் படவேண்டியது என்ற கருத்தை அத்தலையங்கம் வலியுறுத்தி நின்றது. இவ்வாறான சிந்தனைகள்செயல்பாடுகள் என்பவற்றோடு தொடர்ந்து வெளி வந்து கொண்டிருந்த அலை

எழுபதுகளின் இறுதியிலே ஈழத்துத் தமிழிலக்கியத்திலே ஒரு புதிய செல்நெறியைத் தெளிவாக இனங்காட்டி நின்றது. அலை தொடக்கிவைத்த இச் செல்நெறியை மேலும் வளர்த்தெடுப்பதிற் பங்கு கொள்ளவந்த ஒரு இளைய தலைமுறையின் வெளிப்பாடாகவே புதுசு சஞ்சிகையின் தோற்றம் அமைநதது. 'புதுசு' என அமைந்த அதன் பெயரே என்றும் புதுமையை நாடிநிற்கும் இயங்கியல் தொடர்பான சிந்தனையோட்டத்தைப் புலப்படுத்துவதாயிற்று.

[அடுத்தவாரம் தொடரும்]

இந்த இக்கட்டான சூழ்நிலையில்
உங்கள் T. V யை திருத்துவதற்காக
கொழும்புக்கு கொண்டு போகவேண்டிய
அவசியமே இல்லை.

நெஷனல் T. V. றேடியோ றேடியோ கசற்

எதுவானாலும் தரம்குன்றாத நெஷனல் உதிரிப் பாகங்கள்கொண்டு திறமைமிக்க தொழில்நுட்ப வல்லுனரால் திருத்திக்கொடுக்கப்படும்.

நெஷனல் பிரதம விற்பனையாளர்:
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23447
A-335

## வானபரன் உயிர்த்தார் !

பாவமெனும் மாசகற்றிப் பூதலத்தை மீட்பதற்கே
ஆவலொடு சாவிலிருந்துயிர்த்த — தேவமன்னு!
சாந்தியுட னன்புஞ் செகமெல்லாந் தங்கிநிற்கப்
பூந்தாள் பணிந்தோமிப் போது

மண்ணகத்தோர் நல்லிறைவன் மைந்த னடிபோற்ற
விண்ணிலுறை தூதர் வணங்கிவர — எண்டிசையும்
ஆனந்தத் தாலாட்டி யின்புறவே தேவமகன்
ஈனமுறு சாவென்றா ரிங்கு

அன்ப முதம்விழியி லூறச் சிறகணைத்து
இன்ப விளக்கேற்றி எம்மவர்க்கே — என்றென்றும்
வான்வீட்டைத் தந்தார் வரப்பொருளாம் யேசுபிரான்
மூன்றாம்நாள் சாவாதே மீண்டு

மோனத்திற் பூவுலகம் மூழ்கிடவுங் கல்லுதிர்ந்து
வான பரனுயிர்த்தார் வைசறையில் — ஞானமழை
பெய்கின்ற மக்கள் பெருவாழ்வைக் கண்டிடவே
துய்ய னருள்வான் துணை

பொங்குகட லார்ப்பரிக்கப் பூக்கள் சரந்தொடுக்கத்
தங்கநிற நெற்கதிர்கள் தலைதெனச் — சங்கூதுந்
தென்றல் ரதமேறித் தெய்வீக வாழ்வளிக்க
என்மன் னனுயிர்த்தா ரின்று.

பாஷையூர் மு. சிங்கராயர்.

## இலங்கை பறந்துவரும் இங்கிலாந்து மத்தியஸ்தர்

**பொ.கணபதிப்பிள்ளை**

தற்போது இலங்கையில் நடைபெறும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகிப்பதற்காக இங்கிலாந்து மத்தியஸ்தர்களான டிக்கி பேர்ட்டும் டேவிட் ஷெப்பேர்ட்டும் வருகின்றார்கள். பெரும்பாலன ஆங்கிலேய மத்தியஸ்தர்கள் பாரபட்சமற்ற தீர்ப்பு வழங்குவதில் திறமைசாலிகள. இலங்கை, அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள மத்தியஸ்தர்கள பாரபட்சமான தீர்ப்புகளைத் தமது நாட்டுக் கிரிக்கெட் அணியினருக்குச் சார்பாக வழங்குவதாகச் சமீபகாலமாகப் பல கிரிக்கெட் வீரர்கள் குறைபட்டுக்கொள்கின்றார்கள் ஆனால் இங்கிலாந்து நாட்டிற்குச் செல்லும் வேறு நாட்டுக் கிரிக்கெட் அணியினர் இங்கிலாந்து மத்தியஸ்தர்களின் தீர்ப்பையிட்டு அதிருப்தியடைவதில்லை. இதற்குக் காரணம் அவர்களின் மத்தியஸ்தத் திறமையே. ஆங்கிலேய மத்தியஸ்தர்களுள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவரான தற்போது இலங்கை வரும் டிக்கி பேர்ட் உலக நாட்டுக் கிரிக்கெட் வீரர்கள் பலராலும் பாராட்டப்படுகின்ற ஒருவராவார்

இவர் மத்தியஸ்தம் வகிக்கும் போது கிரிக்கெட் மைதானத்தில் பல ரசிக்கும்படியான சம்பவங்களும் நடப்பதுண்டு. 1971ம் ஆண்டு சுனில் கவாஸ்கர் இங்கிலாந்து கிரிக்கெட் மைதானமொன்றில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய தலைமுடியில் ஒரு சிறியபகுதி நெற்றியில் விழுந்து கண்ணை மறைத்து அவர் விளையாடுவதற்குப் பலமுறை இடையூறாக இருந்தது. கவாஸ்கர் ஒரு கணம் யோசித்துவிட்டு மத்தியஸ்தரான டிக்கி பேர்ட் பக்கம் திரும்பி, ''டிக்கி! உம்மிடம் கத்திரிக்கோல் இருக்கின்றதா?'' (''Dikie! Do you have a pair of scissors?'') என்று கேட்டார். சுனில் கவாஸ்கரின் வேண்டுகோளைப் புரிந்துகொண்ட டிக்கி பேர்ட் தமது கோட்டுப் பையிலிருந்து கத்தரிக் கோலை எடுத்து மைதானத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து ஆச்சரியப்படும்விதத்தில் சுனில் கவாஸ்கருக்கு இடையூறாக அவர் நெற்றியில் விழுந்திருந்த அந்தச் சிறு தலைமுடியை

(10ம் பக்கம் பார்க்க)

கொடைக்கானலில்
கல்வி வாய்ப்பு
St. Peter's Public School
வரவேற்கிறது

ஏழு ஏக்கர் விஸ்தீரணமுள்ள அழகும் அமைதியும் தவழும் இயற்கைச்சூழலில் அமைந்த, அரசஅங்கீகாரம் பெற்ற இக்கல்வி நிறுவனம் அனுபவம் வாய்ந்த, தியாக உள்ளம் படைத்த ஆசிரியர்களைக் கொண்டது. பல நாடுகளைச் சேர்ந்த மாணவமாணவியர் இங்கு பயில்கின்றனர். L, K G. முதல் X Std வரை மாணவமாணவியர் சேர்க்கப்படுவர். விடுதி வசதி உண்டு. சேரவிரும்புவோர் விண்ணப்பப்படிவம் பெறுவதற்கு பின்வரும் முகவரிக்கு எழுதவும்.

SAMBABU, PRINCIPAL,
St Peter's Public School,
Post Box No. 8,
Kodaikanal 624101,
South India.
(C 1388)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ரூடியோ

## இன்று பண்டிதமணியின் நினைவஞ்சலிப் பிரார்த்தனை

(சுழிபுரம்)

மறைந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்களின் நினைவஞ்சலி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அவரது பழைய மாணவர்களாலும் அனுதாபிகளாலும் ஒன்று சேர்ந்து இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வழக்கம்பரை அம்பாள் கோவில் மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது. இந்த ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் யாவரையும் பங்குகொள்ளுமாறுவேண்டப்பட்டுள்ளனா. பிரார்த்தனை, அஞ்சலி உரை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும். பல பிரமுகர்கள் இவ்அஞ்சலி உரையில் பஙகுகொள்வார்கள்.

## வீதியைத் திருத்தக் கோரிக்கை

(கரவெட்டி)

புலோலிச்சந்தி வீதி பழுதடைந்து பெருங்குன றும்குழியுமாகக் காணப்படுவதனுல்இச் சந்தியில் பெரும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனுல் புலோலிச்சநதி வீதியைதத்ருத்திபுனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு முன்னுள் கிராமோதயசபைத் தலைவர் திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் பனை நெடுஞ்சாலைகள் திணைக்கள நிறைவேற்றுப்பொறியியலாளரைக் கேட்டுள்ளார்.

## "சாதி ஒடுக்கு முறைக்கெதிரான ஒரு குரல் ஓய்ந்துவிட்டது"

### அநீதி ஒழிப்பு ஒன்றியம் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

''சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிவந்த ஒரு முற்போக்கு போராளியின் குரல் ஓய்ந்துவிட்டது. கே. டானியல் எனும் பெயரால் அவர் சாதி ஒடுக்குமுறை உட்பட்ட பல தசாப்தங்கட்கு முற்பட்ட நிகழ்வுகளையும் சமகால பிரச்னைகளையும் தனது பேனுமுனையால் வெளியிட்டுள்ளார். இதில் இறக்கும்வரை முழுமூச்சாகவே ஈடுபட்டுவந்துள்ளார். அவரின் இழப்பு சகல உழைக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும்''.

இவ்வாறு எழுத்தாளர் கே. டானியலின் மறைவு குறித்து அநீதி ஒழிப்பு ஒன்றியத்தினுல் வெளியிடப்பட்டுள்ள அஞ்சலி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''டானியல் அவர்கள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மிகப்பெரும் தூணுகவிளங்கி சென்ற தசாப்தங்களில் நடைபெற்ற சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில் முன்னணியில் போராடியுமுள்ளார்.

அவரின் மறைவு இலக்கிய உலகிற்கும் இலக்கிய ஆர்வலர்கட்கும் குறிப்பாக ஒடுக்குமுறைகளை எதிர்க்கும் புதியதொரு பரம்பரைக்கு ஈடு செய்யமுடியாதது. அன்னரின் மறைவால் துயருறும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.''

## இலங்கை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டிவிட்டார். கவாஸ்கரும் டிக்கி பேர்ட்டுக்கு நன்றி செலுத்தித் தொடர்ந்து இடையூறின்றித் துடுப்பெடுத்தாடத் தொடங்கினர்.

இப்படியான பேரும் புகழும் வாய்ந்த டிக்கி பேர்ட்டினுடைய பாரபட்சமற்ற மத்தியஸ்தத்தை இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களா? இல்லாவிடில் தமக்கே உரித்தான பாணியில் காட்டுக் கூச்சல் இட்டுக் கற்களால் எறிவார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

## புங்குடுதீவு போசாக்குணவு விநியோகத்தில் மோசடி?

### ஒன்றியம் விசாரிக்கின்றது

[புங் - நிருபர்]

புங்குடுதீவில் சம்பிரியன், மணற்காடு, நுணுக்கள் ஆகிய மூன்று நிலையங்களில் றெட்பானா நிறுவனத்தின் உதவியுடன் வழங்கப்பட்டுவந்த போஷாக்குணவு, பால்மா விநியோகம் கடந்த பல மாதங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி நிலையங்களின் நிலைமைகள் புங்குடுதீவு வெகுஜன விழிப்பு ஒன்றியத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன.

சம்பந்தப்பட்டவர்களை ஒன்றியம் விசாரணை செய்தபின் அவைபற்றி புங்குடுதீவு மக்களுக்கு விரிவான அறிக்கையொன்றை வெளியிட்டு, அதன் பிரதியொன்றை தமக்கும் அனுப்பி வைத்தால் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு மீண்டும் இவ் விநியோகம் ஆரம்பிக்க ஆவன செய்யப்படும் என றெட்பானு நிறுவனம் ஒன்றியத்திடம் தெரிவித்திருக்கின்றது.

மேற்படி ஒன்றியம், தனது ஐந்து உறுபபினர்களைக் கொண்ட விசேஷ குழுவொன்றை அமைத்து இவை பற்றி துரிதமான விசாரணைகள் செய்வதாகத் தெரிவித்தது.

## இவ்வாரம் எப்படி?

### மேடம்

நண்பர்களும் பகைத்துக் கொள்வார்கள். எவ்விடயத்திலும் அதிக விழிப்புணர்ச்சியுடன் ஈடுபடுவது நன்று. மக்கள் புகழ்ச்சியும் அவ்வழிச் சிறப்பும் உண்டு. எதிலும் ஆத்திரத்தை தவிர்த்துக் கொள்ளவும். அமைதியுடன் செயற்பட்டால் வெற்றியடைவீர்.

### இடபம்

குடும்பங்களில் மகிழ்ச்சியான சம்பவங்கள் இடம் பெறும் நீண்டகாலத்து திட்டம் ஈடேறும். நண்பரும் துன்பந்தரலாம் வீண்வம்புகளில் தலையிடாவண்ணம் அமைதியுடன் நடந்து கொள்ளவும். புத்திரவழியாலும் சிறப்புண்டு.

### மிதுனம்

தொட்டதற்கெல்லாம் திட்டுக்கேட்பீர்கள். ஏற்படலாம். காயங்கள் தெய்வ சிந்தையுடன் இருக்கவும். காதலர்களுக்கு சனிவான வாரம். களஸ்கிரப் பெருமைக்கும் இடமுண்டு. தொழில் விடயங்களில் கவனம் வேண்டும்.

### கடகம்

பெரியவர்களின் பாராட்டுக்கும். பிதாவழி பெருமைக்கும் இடமேற்படும். நல்ல சந்தர்ப்பங்கள் ஒரு சிலரின் தீய எண்ணங்களால் தட்டிக்கழிக்கப்படும். பெண்கள் விடயத்தில் நல்ல பலன் கிடைக்கும் விரோத ரேகை படரும். சிந்தித்து செயல்படவும்.

### சிங்கம்

தொழில் விடயங்களில் நல்ல முன்னேற்றமும் பொருள் விடயங்களில் நல்ல லாபமும் கிடைப்பதுடன் உயர்வான பிரிவுகளும் உண்டு. பிதாவழியால் தனலாபம் கிடைக்கும். பிரயாணத்தின் போது பொருள் தவறக் கூடும். போக்குவரத்தில் அவதானம் வேண்டும்.

### கன்னி

அமைதிக்குப் பங்கம் ஏற்படும். உடல் நிலையில் சுகாதாரம். வேண்டும். அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். பொருள உயரும. கடன் வந்து சேரும். இடமாற்றங்களுமுண்டு. குடும்பத்திலும் குதூகலம் பொங்கும்.

### துலாம்

தெய்வ நம்பிக்கை மேலோங்கும். உற்சாகம் குன்றும் தாய்வழிநலனும் நலமுடன் கிட்டும். பொறுமையின் நிழல் தொடரும். செய்யும் உதவி உபத்திரவத்தை தருவாக்கும்- ஆசபயம் அருகில் உண்டு, குடும்பத்திலும் புயல் வீசி ஓயும். புன்னகை புத்துணர்வைக்கொடுக்கும்.

### விருச்சிகம்

நிச்சயமற்ற நிலையில் வேதனை. உணவில் அதிக கவனம் செலுததவும். அவப்பெயருக்கும் சிறிய ஆயுத பீடைக்கும் இடமேற்படலாம். பொருள் வாய்ப்பு ஏற்படும். சில கடன் தொல்லைகள் நிவர்த்தியாகும். பிரிவில் மகிழ்ச்சி ஏற்படும் வெளியிடச் செய்திகளும் கிடைக்கலாம்.

### தனுசு

உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும். வியாபாரிகள், பேச்சாளர்கள் போற்றப்படுவார்கள் கண் துடைப்பு வேலைகள் கவலையைத்தரும். குழந்தையின் உடல் நலம் குன்றலாம். காலை வாரிவிடக்கயவர்கள் காத்திருப்பர். உறவினர்களே உங்களைத்தூற்றுவர் பழைய வரும்படியும் வந்து சேரும்,

### மகரம்

சகோதரர் விஷயங்களில் பொறுமையைக்கடைப்பிடிக்கவும். பிரிவுகளைத்தவிர்க்கவும். வணிகத்துறையில் வாய்ப்புக்கள் கிடைக்கும் சொத்து விடயத்தில் நல்ல முடிவு ஏற்படும். உடல் நிலையிலும் சுகக் குறைவு தென்படும். பகை தேடிவரும் அமைதியும் நிதாமும் வேண்டும்.

### கும்பம்

குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சியைத்தரும். புத்திரர் மூலம் பாராட்டப்படுவீர்கள் லாப சாமா முதல் செய்வதற்கு இடமுண்டு. வாகனச் சொந்தக்காரர்களுக்கு வருமான விருத்தியுண்டு சூழ்ச்சியில் அகப்பட நீர்கள் முன்னெச்சரிக்கை வேண்டும்.

### மீனம்

நண்பர்களும் பகைத்துக் கொள்வர், எவ்விடத்திலும் அதிக விழிப்புணர்ச்சியுடன் ஈடுபடுவது நன்று. மக்கள் புகழ்ச்சியும் அவ்வழிச்சிறப்பும் உண்டு. வாகனப் பிரச்சினைகளும் நிவர்த்தியாகும். தாய்வழி மகிழ்ச்சியுண்டு எதிலும் ஆத்திரத்தை தவிர்க்கவும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## இன்று

மாதம் — பங்குனி
திகதி -17 [1986- 03 30]
கிழமை - ஞாயிறு
திதி - பஞ்சமி முன் இரவுவரை.
நக்ஷத்திரம் - அனுஷம் முன் இரவு வரை

## மென்பந்துப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை சனசமூக நிலையம் யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே மென்பந்து நொக்கவுட் போட்டியை நடாத்தவிருக்கிறது.

இந்த நொக்அவுட் போட்டி எதிர்வரும் 5ம் திகதி முதல் நடைபெறும் என மேற்படி சனசமூக நிலையத்தின் காரியதரிசி தெரிவித்தார். (வி)

## புங்குடுதீவுவாசி வவனியாவில் மரணம்

[வவனியா]

வவனியா ஆஸ்பத்திரியில் மயக்கமான நிலையில் அனுமதிக்கப்பட்ட புங்குடுதீவைச் சேர்ந்த [33 வயதான] நவரத்தினம் என்பவர் சில நிமிடத்தில் மரணமானுர்.

கொழும்பில் உள்ள வியாபார நிலையம் ஒன்றில் இவர் விற்பனையாளராக கடமை புரிபவர் எனத்தெரிய வருகின்றது.

இவரது சடலம் தற்போது வவனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. உறவினர்களுடைய வருகையினை எதிர்பார்த்து மரணவிசாரனை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டது.

## நாளை ஆங்கிலதின பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணர் பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலய ஆங்கில தினப்பரிசளிப்பு விழா நாளை திங்கள் காலை 10-30 மணியளவில் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு, சிவநாயகமூர்த்தி அவர்களது தலைமையில் நடைபெறும்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர் திரு. எஸ். பரமநாதன் யாழ் 'ரெலிகுளோப்' அதிபர் திரு ம. சிவராசா, வைத்திய கலாநிதி செல்வி இ. ச. பாமா, தொழில் அதிபர் க. கனகராசா, ஜே. பி. ஆகியோர் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் வரவேற்புரை நிகழ்த்துவார். திருமதி சிவநாயகமூர்த்தி பரிசில்களை வழங்குவார். பரிசுப்புத்தகங்களையும் பொருட்களையும் திரு. ம சிவராசா அன்பளிப்பாக கொடுத்துள்ளார். க்

பின்னுறுதிக்கட்டளை பற்றிய

## அறிவித்தல்

கொழும்பு பம்பலப்பிட்டி பிளற்றில் வசித்து காலஞ்சென்ற யோகேஸ்வரி வேலாயுதபிள்ளை என்பவரின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக,

— காலஞ்சென்றவர்

மாணிக்கம்பிள்ளை வேலாயுதபிள்ளை, கலட்டி அம்மன் ரோட்டு, யாழ்ப்பாணம்.

— மனுதார்

வழ. இல: தத்துவம்/3951,

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுகிச் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு வைகாசி மாதம் 02-ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு. இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

1986-ம் ஆண்டு மாசி மாதம் 14-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்.
பதிவாளர்.

வரைந்தது:
பா. தவபாலன்.
மனுதாரின் சட்டத்தரணி.

C 1473

## காணவில்லை



இந்திய வம்சாவளி வேலைக்காரப் பையன், வயது 14 வரை, உயரம் 4 அடி, நிறம் பொது நிறக்கறுவல், கட்டைக் காற்சட்டை அணிந்திருந்தான். 26-3-86 புதன் அதிகாலை தொடக்கம் காணவில்லை. சண்டுபிடிப்பதற்குரிய தகவல் தருவோருக்குப் போதிய சன்மானம் வழங்கப்படும்.

ஸ்ரீநிவாசன்,
மருதனுமடம்,
சுன்னுகம்.

C 1479

## 48-ம் நாள் நினைவஞ்சலி

### கந்தசாமி குகதாஸ்



தோற்றம்: 09-02-1948
மறைவு: 11-02-1986

எங்கள் அன்புச் செல்வமே நீங்கள் எமமை விட்டு மறைந்து நாட்கள் நாற்பதெட்டானுலும் என்றும் உங்கள் நினைவு நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திககிறோம்.

அன்புத்தாயார்,
சிறிய தந்தை,
சகோதரர்கள்,
சகோதரிகள்.
மச்சான், மருமக்கள்,
உற்றுர், உறவினர்,
நண்பர்கள்.

C 1467

# விசர்நாய்க் கடிக்கு தடுப்பு மருந்துத் திட்டம்

(அராலி)

யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் விசர் நாய்க்கடி நோயைத்தடை செய்வதற்கு வளர்ப்பு நாய்கள் எல்லாவற்றுக்கும் தடுப்பு மருந்து போடும் திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தடுப்பு மருந்து போடும் திட்டத்தின் கீழ், அடுத்த மாதம் 3ம் திகதி அராலி தெற்குப்பகுதி நாய்களுக்கு அராலி கிராம சபை அலுவலகத்திலும், 4ம் திகதி அரசினர் வைத்தியசாலை அராலி மேற்கு வட்டுக்கோட்டையிலும், ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையத்திலும் [அராலி வடக்கு] தடை மருந்து ஏற்றப்படுமெனவும் வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

## பாரீர் நீ வந்து!

சனீஸ்வரனே! நீசிறச்
சயிக்கிள்எனை மோதச்
சனீஸ்வரனே! வீழ்ந்துநான்
சயந்தேன்-
முனீஸ்வரனே!
யாழ்ப்பாணுஸ் பத்திரியில்
ஆறுவது வாட்டில்
வாழ்கின்றேன் பாரீர்நீர்
வந்து!

–கவியரசு முருககூரியன்


## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

India இரும்புப்பெட்டி(Iron-safe) உயரம் 3' 11'', அகலம் 2' 11'' England இரும்புப் பெட்டி உயரம் 2' 2'' அகலம் 1½' 1'' இரண்டும் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V S Kandiah, Opposite of Sub Post Office, [Maruthady] Main street, Puloly East, Pointpedro [C 1494]

National R. X. 250 W Two in One Sony T. V 20'', 20X20-2032 National வீடியோ டெக் 340 - 480 4 System Sanyo Two in one Radio National T, V 20 B/W டெக் N. V. 250 சிங்கப்பூர் ரெடிமேட் ஆடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. T L வீடியோ சென்ரர், No: 3 நவீன சந்தை, மேல்மாடி, திருநெல்வேலி. (C1497)

### கல்வி

சமூகக்கல்வி நூல் (ஆண்டு 9, 10, 11 புதியபாடத்திட்டம்) வெளிவந்துவிட்டது ஆசிரியர் க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 1498)

S. L. A. S. பரீட்சைக்குரிய பொதுவுளச் சார்பு, பொது அறிவு கிரகித்தல் நூல்கள் வெளிவந்துவிட்டன. (ஆசிரியர் க குணராசா) ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (C 1499)

**எம்பயர் திரையில்**
10-30 2-30. 6-30, 9-15
கில்க் (இருவேடம்)
கபில்தேவ்
**நினைத்ததை முடிப்பவள்**

**LIDO Jaffna**
10-30. 2-30, 6-30
கமல்-ஸ்ரீதேவி-ரஜனி
**16 வயதினிலே**
புதிய பிரதி (கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன்
அம்பிகா கவுண்டமணி
நடித்த
**நான் பாடும் பாடல்**
(கலர்)


## 150 துருப்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்பு வேலைகளைச் செய்வதற்கு ஓமந்தையில் அகதிகள் முகாமிலிருக்கும் அகதிகள் அமர்த்தப்பட்டுள்ளனர் இந்த அகதிகள் அனுராதபுரத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (மா)

## இன்று நூல் வெளியீடு

(புலோலி

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை உதவி வைத்திய பயிற்சிநெறி மாணவர்களின் வைத்தியகலாநிதி கே. சுகுமாரினால் எழுதப்பட்ட குடும்ப முதலுதவி நூல் வெளியீடு இன்று ஞாயிறு காலை 9மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராஜலிங்கம் மண்டபத்தில் கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. த. சிவசிதம்பரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப்பேராசிரியர் சிவத்தம்பி வவனியா மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் யாழ் தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. எஸ் சிவமகாராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

யாழ்பல்கலைக்கழகமருத்துவ பீடத்தின் சமூக மருத்துவவியல் சிரேஷ்டவிரிவுரையாளரும் உதவிவைத்திய பயிற்சி நெறி இணைப்பு அதிகாரியுமான வைத்திய கலாநிதி என். சிவராஜா பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை ஆலோசக பொது வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி எஸ். ஆனந்தராஜா அதிபர் திரு கே. சிவபாதசுந்தரம் இலங்கை குடும்பத்திட்ட சங்க யாழ் மாவட்டதிட்டமிடல் அதிகாரி திரு. ஏ எஸ். பூவேந்திரன் ஆகியோர் நூல் அறிமுகம் செய்வார்கள்,

மக்கள் வங்கி யாழ் பிராந்திய உதவி முகாமையாளர் திரு இ. சிவசிதம்பரம் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

# சைக்கிளில் வந்த கமாண்டோக்கள் சூட்டு:2 பேர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வத்தாறுமூலைக் கிராமத்தில் சைக்கிளில் 'பவனி' வந்த 8 இராணுவ கமாண்டோக்கள் முன்னால் வந்த டிராக்டர் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது டிரக்டரில் வந்த இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்

டிராக்டரில் வந்த மீதிப் பேர் தப்பியோடிய பின்ன கமாண்டோக்கள் டிராக்டருக்குத் தீவைத்து அதை நாசப்படுத்தினராம்.

## மாறுவேடங்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிப் பொதுமக்கள்தெரிவித்தித்தன இரவு வேளைகளில் இவ்வாறுனவர்கள் கூடுதலாக நடமாடியதாகவும் அகால வேளையில் வீடுகளின்கதவைத் தட்டி கிரரமவாசிகளை எழுப்பி சோதனை செய்தார்களென்றும் சிலர்தண்ணீர் வேண்டிக் குடித்தார்கள் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி இராணுவமுகாமிற்கு முன்பாக தபால்நிலையத்திற்கு சமீபமாக வசித்து வந்தவர்கள் திடீரென வசிப்பிடங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். இதைத்தொடர்ந்து இராணுவம் அந்த இடங்களில் குடியேறியது.

இதேவேளை எட்டாம் வாய்க்காலில் அருவிவெட்டி சூடு வைக்கப்பட்டிருந்த நெல்லை இனந்தெரியாதோர் தீவைத்து கொழுத்தினர்கள் இதற்கு முன்பும் இதுபோன்ற சம்பவங்கள் கிளிநொச்சிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

## மட்டக்களப்பில் இன்று கூடும் ப. செ. உ. சங்கம்

(மட்டக்களப்பு)

இடைக்காலமாக செயல்படாமலிருந்த அகில இலங்கை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம் பி க்களால் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

அண்மைக்காலங்களில் இவ்வுத்தியோகத்தர்சங்க நிர்வாகிகளில் பலர் ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டதையும் கைது செய்யப்பட்டதையும் தொடர்ந்து சங்கநிர்வாகம் இயங்காமலிருந்தது.

இச்சங்கத்தின் தலைவர் திரு பூ நடேசானந்தன்கூட கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு புனித மரியால் இணைப்பேராலய மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. [மா]


## பிரயாண ஒழுங்கு

**குவைத், டுபாய், சவுதி அரேபியா**

செல்பவர்களுக்கு, பிரயாண ஒழுங்குகள் உடனடியாகச் செய்துகொடுக்கப்படும்.

**கிளீனேஸ் (ஆண், பெண் இருபாலாரும்)**

10- 4- 1986 க்கு முன்பாகத் தொடர்பு கொள்ளவும்.

**யூனிவேசல் ஏஜென்சி,**

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக

125 (455) ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

(C 1496)


கண்ணிவெடி எதிரொலி——————

# ஐந்து மரணங்களும் கொலை எனத் தீர்ப்பு!

(வவனியா)

வவனியவில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது சூடுபட்டு இறந்த ஐவருடைய மரணங்களும் கொலை என விசாரணை நடத்திய அதிகாரி தீர்ப்பளித்துள்ளார்.

மாணிக்கம் துரைராஜா, சத சிவம் கமலநாதன், பெருமாள் கோவிந்தசாமி, திருமதி ஞானேஸ்வரி மகேஸ்வரன், 5 வது நபரான பிச்சைக்காரன் ஆகியோர் வவனியாவில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவத்தின் எதிரொலியாக சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே

இந்த ஐவரும் பொது மக்கள் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது மாணிக்கம் துரைராஜா அசுவேலியினைச் சேர்ந்தவர் உறவினர்கள் விசாரணையின் பின் சடலத்தினைத் தமது ஊருக்கு எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது

டயர் கடைக்குள் எரிந்த நிலையில் முண்டமாகக் காணப்பட்ட கருகிய சடலம் அக்கடையில் வேலைசெய்யும் ஞா. கந்தசாமி (43 வயது) என்பவர் தான் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் மதகு வைத்த குளத்தினைச் சேர்ந்தவர் 5 பிள்ளைகள் இவருக்கு உண்டு கருகிய சடலத்திற்கு அருகில் இவருடைய சைக்கிள் காணப்பட்டது இதனைக் கொண்டே அடையாளம் காண முடியாதபடி இச்சடலம் மேற்படி நபருடையது என ஊர்ஜிதம்செய்யப்பட்டது

கண்ணிவெடிச் சம்பவதினத்தன்று எரிந்த இரு வாகனங்களில் ஒன்று தென் பகுதி பெரும்பான்மை இனத்தவருடையது மற்றைவாகனமானயவான் வவனியா வர்த்தகர் ஒருவருக்கு உரித்தானது.

## பாரிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வியூ ஹோட்டல் முகாம் பிரதேசம் முதல் பலாலி (விமானத்தளம்) தரைப்படை ஆகாயப்படை கூட்டு நடவடிக்கைப் பிராந்தியம் வரை முப்படைகளின் இப்பாரிய தளம் அமையும் எனத் தெரியவருகிறது.

### வெளியேற்றம்

குறிப்பாக காங்கேசன் துறை சடற்கரையோரமாக உள்ள மயிலிட்டி, வறுத்தலைவிளான், கட்டுவன், குரும்பசிட்டி, குட்டியப்புலம், வசாவிளானின் ஒரு பகுதி ஆகிய கிராமங்களிலிருந்து நூற்றுக்கு 7 வீதமான குடும்பங்கள் தங்கள் இல்லங்களையும், விவசாய உற்பத்தி விளை நிலங்களையும் விட்டு அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றன. இந்த வெளியேற்றத்தை ஊக்குவித்த மிரட்டல்கள்மேற் குறிப்பிட்ட தளம் அமைப்பதற்கான ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் என்பதும் தெரியவருகிறது.

### காங்கேசன் துறைமுகம்

இது இவ்வாறிருக்க காங்கேசன் துறைமுகத்தில் இராணுவத்தினருக்குரிய ஆயுதங்களையும், தளபாடங்களையும் கொண்டு வந்து குவிப்பதற்காக துறைமுகத்தை நவீன முறைப்படுத்தும் வகையில் துரித வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன

இத் துறைமுக வேலைகள், திருமலைத் துறைமுகத்தில் பலரதும் கவனம்திரும்பியிருக்கும் இவ்வேளை காங்கேசன்துறைமுகத்தை ஒரு களமாக விரிவுபடுத்தி அதனை ஒரு வல்லரசின் மறைமுக இயக்கத்தில் வைத்திருக்கும் அறிகுறிகள் தென்படுவதாகவும் வட பகுதி அரசியல் அவதானிகள்கருத்து வெளியிட்டுள்ளனர்

### கேந்திரப் பகுதி

உலக யுத்த காலங்களின் போது பலாலி விமான நிலையம் பிரிட்டிஷ் படைகளின் விமானத் தளமாகப் பயன்படுத்தப்பட்டது தெரிந்ததே. அண்மைக் காலங்களாக பலாலி விமான நிலையப் பகுதியில் இடம் பெற்ற விஸ்தரிப்பு வேலைகள் முப்படைகளுக்கும் பயன்படத்தக்கவிதத்தில் அவ்விமானத்தளம் ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானங்கள் நிறுத்தி வைக்கும் வகையில் அமைக்கப்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தளத்தை மேலும் விஸ்தரிப்பதன் மூலம் சகல ரகத்தைச் சேர்ந்த விமானங்களும் இங்கு தங்குவதற்கு வசதி ஏற்படலாமெனக் கருதப்படுகிறது.

தமிழ்ப்போராளிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கை என்ற பேரில் முப்படைகளையும் இணைந்த இப்பாரிய தளம் வடபகுதில் அமைவதுடன் இலங்கையில் மட்டுமல்லாது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு கேந்திரப் பகுதியாகவும் மாற்றப்படலாமெனக் கருதப்படுகிறது [மா]

## சந்நிதியான்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி

ஆலயப் பக்கத்திற்கும் செல்வதில்லை.

21ம் திகதி வெள்ளிக்கிழமையும், சனி, ஞாயிறு, திங்கட் கிழமையும் கொண்டமாறு இராணுவ முகாமிலிருந்து நடாத்தப்பட்ட தாக்குதலினால் ஆலய தரிசனம் செய்ய வந்த நால்வர் பலியாகினர். ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவங்களை அடுத்து ஆலயப்பகுதிக்குச் செல்வது அஞ்சவேண்டியதாக இருக்கின்றது.

இம் முருகன் ஆலயப் பூசைகளை நடாத்த வேண்டிய முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறிய ஆலய பூசகர் இது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டபோது ஆலய பூசகரை பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்திக்க வழி வகுக்கப்பட்ட போதும், ஆலய பூசகர் பிரிகேடியரைச் சந்திக்கவில்லையென்றும் ஆலயத்துடன் முகிய தொடர்பு கொண்டுள்ள முக்கியஸ்தர் ஒருவர் எமது நிருபக்குத் தெரிவித்தார்

இச் சந்நிதி ஆலய வழிபாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதால், இங்கு கூடும் ஆயிரக் கணக்கானவர்கள் பங்குபற்றும் அன்னதான நிகழ்ச்சிகளும் முடங்கியுள்ளன என்றும் எனவே இந்த ஆலயவிடயத்தில் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக பேறகொண்டு மீண்டும் அதன் சுமுக செயல்பாட்டுக்கு வழிவகுக்கும்படி முருகபக்தர்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளனர்.

## நேற்றும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொப்டரிலிருந்தும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது. சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் பலியானார். இவர் புனலைக்கட்டுவனைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## திருக்கோவில்...

1ம் பக்கத் தொடர்ச்சி

வேளையில் வேவு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று இதனை அவதானித்ததையடுத்து இக்கப்பல் அவ்விடத்தைவிட்டு நகர்ந்துவிட்டதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [பி]

# "அதிகாரமில்லாத சுயாட்சியை [redacted] தமிழர் தலையில் 'கட்டியடிப்பதே' இலங்கையின் தந்திரமாயுள்ளது!"

## -'இந்து'வில் ஜி. கே. ரெட்டி

(புதுடில்லி)

''இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நியாயமான அடிப்படையில் சுயாட்சியதிகாரம் வழங்கப்படும் விஷயத்தில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இணங்கவைக்க முடியும் எனத் திடமாக நம்பிய புதுடில்லி ஆளும்வட்டார அரசியல் நிபுணர்கள், தாம் ஏமாற்றப்பட்டு விட்டதாகவே தற்போது நினைக்கின்றனர்.

''ஒரு புறத்தில் அரசியல்தீர்வின் அவசியத்தை வலியுறுத்திக்கொண்டு, மறுபுறத்தில் ஓர் இராணுவத் தீர்வினைத் தேடுவதும், முடிந்தால் காத்திரமான அதிகாரங்களற்ற 'மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி'யை தமிழ்த் தலைவர்களின் தலையில் கட்டியடிப்பதுமே இலங்கையின் இன்றைய தந்திரோபாயமாக இருக்கிறது'' என சென்னை நாளேடான 'இந்து'வில் அரசியல்விமர்சகர் ஜி. கே. ரெட்டி எழுதியுள்ளார்.

அவர் மேலும் எழுதியுள்ளதாவது; ''ஒரு தீர்வுக்கான சாராம்சமுள்ள துவிதஆலோசனைகளையும் முன்கூட்டியே தெரிவிப்பதில் தயக்கம்காட்டுகின்ற இலங்கை ஜனாதிபதி, இரு தரப்புகளையும் பேச்சுவார்த்தைக்கு உடன்படச் செய்வதில் இந்தியா தனது முயற்சிகளைக்கைவிடக்கூடாது என்று மட்டும் சொல்லிவருகிறார். ஆனால் பிசுபிசுத்துப் போன பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு இந்தியா வழங்கும் உதவியை அவர் பயன்படுத்த விரும்புவதாகத் தெரியவில்லை.

''தற்போது ஏற்பட்டுள்ள 'இழுபறி' பற்றி தேவைக்கதிகமாக தன்னை அலட்டிக் கொள்ள இந்தியா தயாராயில்லை ஏனெனில் இந்த 'இழுபறி' இலங்கை அரசுககே பெருஞ்சேதத்தை உண்டுபண்ணும். தமிழ்த்தீவிரவாதிகளின் பிரதிநிதிகளையும், இலங்கை அரசின் பிரதிநிதிகளையும் இந்தியஉபகண்டத்துக்குவெளியே ஓரிடத்தில் சந்திக்கவைக்க இந்தியா முயலவேண்டும் என கொழும்பு வட்டாரங்களிலிருந்து சில வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்ட பொழுதிலும், இவ்விஷயத்தில் தன்னை முழுவதாக ஈடுபடுத்திக் கொள்ள இந்தியா விரும்பவில்லை''. (ஷ)

## விரைவில் முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 4ம் திகதிக்கு முன்னர் க.பொ.த. சாதாரணப் பரீட்சை முடிவுகள் வெளியாகலாமெனத் தெரிகிறது

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற இப்பரீட்சைக்கு சுமார் இரண்டு லட்சத்திற்கு மதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். [வா]

## விசேட பஸ்சேவை!

(யாழ்ப்பாணம்)

பேராதனை வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விசேட பஸ் வண்டிகள் எதிர்வரும் 1ம் 2 ம் திகதிகளில் யாழ்நகரிலிருந்து புறப்படவுள்ளன. இதற்கான பெயர்களைப் பதிவுசெய்துகொண்ட மாணவர்கள் இப்பயணம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் படி கேட்கப் பட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ .இரத்தினக்குருக்கள்

அராலி வடக்கு சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா, பிரதமகுருக்கள் 26 3 86 இல் காலமானார். அன்னார் லோகாம்பாளின் அன்புக் கணவரும், நாகேந்திரக்குருக்கள் [கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானக் குருக்கள்], காலஞ்சென்ற அன்னபூரணி, நடனகந்தசர்மா ஆகியோரின தந்தையும், கனகாம்பிகை அம்மாள், காலஞ்சென்ற தங்கசாமி சர்மா ஆகியோரின் மாமனாரும், சோமஸ்கந்தசர்மா, கிரிஜா, முரளி, கமலன், குமுதினி, பிரியதர்சினி, வத்சலா ஆகியோரின் பேரனுமாவார் முத்துசாமி ஐயர் (சம்மந்தி), நடேசக் குருக்கள், வைத்தீஸ்வரக் குருக்கள் ஆகியோரின் சகோதரருமாவார். இறுதிக் கிரியைகள் 28 3 86 அராலியில் நடை பெற்றன.

தகவல்;இ. நாகேந்திரக்குருக்கள்,
அராலிவடக்கு,
வட்டுக்கோட்டை.

(C- 1493)

### சின்னத்தம்பி செல்லப்பா

சுன்னாகம் வாரிசப்புலத்தைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி செல்லப்பா (ஓய்வுபெற்ற பொலிஸ் அலுவலக லிகிதர்) காலமானார் இவர் பூரணப்பிள்ளையின் அன்புக் கணவரும், நித்தியலட்சுமி, இரவீந்திரன் (பொறியியலாளர், சபா, மலேசியா), முரளிதரன் (சவுதிஅரேபியா), யோகேந்திரன் (கணக்காளர், நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன், கௌரி, சுமித்திரா ஆகியோரின் அன்புமாமனாரும், கஸ்தூரி, நிசந்தன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (30-03-86) பி. ப. 1-00 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

(C 1500) செ. யோகேந்திரன்

### தி. இ. கந்தையா J.P 'கலங்காமு''

மண்டைதீவு சமாதான சபை உறுப்பினரும், சமாதான நீதவானும்,சமூக சேவையாளருமான, இராமு கந்தையா காலமானார். அன்னார் அதிஜெயமணியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஆசிரியர் தே சின்னப்பா-திருமதி சின்னப்பா, நாகம்மா, வைத்தியர் பெ.சி. சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திரு இ சிவகுரு, காலஞ்சென்ற சீ செல்லாச்சி ஆகியோரின் அருமைத்தம்பியும், திரு. சி பாலசிங்கம்['ஈழநாடு'செய்தியாளர்], திருமதி மணி சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு அத்தானும், திரு வீ. சோமசுந்தரத்தின் [உப தபாலகம், மண்டைதீவு சகலனும். திருமதி ஜெ. அருந்தவம், செல்வி பா.சாந்தி (யாழ். இந்துமகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வசந்தரோகினி, வசந்தமாலினி, வசந்தசுலோசினி (யாழ் வேம்படி மகளிர் கலலூரி மாணவிகள்), வசந்தரஜனி, வசந்தபிரேமினி, மணிவண்ணன், கலாவண்ணன்,தினவண்ணன், கிருபாலினி ஆகியோரின் அன்புப் பெரியதகப்பனாரும், திரு. மா. இராசலிங்கத்தின் தம்பியும் திரு நா சீவரத்தினத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (30-03-86)இன்று ஞாயிற்றுக் கிழமை அவரது ''மணிமஹால்'' இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் மூன்று மணிக்கு மண்டைதீவு தலைக்கீரி மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.பாலசிங்கம் [A528]

## இராணுவம் தடுத்த லொறி பொருட்களுடன் வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும் லிருந்து 'அங்கர்' பால்மா, சிகரெட் மற்றும் பொருட்களுடன் யாழ்நகர் நோக்கிவந்த பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கான லொறியொன்று. ஈரற்பெரிய குளத்தில் வைத்து ஆயுதப்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு சில மணிநேரத்தின் பின்னர் அதேபொருள்களுடன் அந்த லொறி யாழ் நகர் அனுப்பப் பட்டுள்ளது

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில், கொழும்பிலிருந்து மேற்படி பொருட்களுடன் வந்த லொறியை ஈரற்பெரியகுளத்தில் வைத்து தடுத்து நிறுத்திய ஆயுதப் படையினர் அதிலிருந்த பொருட்களை இறக்கிவிட்டு, தமது முட்கம்பி மற்றும் சில பொருட்களை ஓமந்தை வரை கொண்டு சென்று இறக்கிய பின்னர் லொறி ஏற்றி வந்த பொருட்களை மீண்டும் அதில் ஏற்றி யாழ்நகர் செல்ல அனுமதித்தனராம். [வா]

## அல்லின்ஏபிரகாம் ஞாபகார்த்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த வானியல் மேதை அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் ஞாபகார்த்தமாக இன்று மாபெரும் பொதுக்கூட்டமொன்று இடம்பெறவுள்ளது

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு திரு. சி. க. சிவகுருநாதன் தலைமையில் இக்கூட்டம ஆரம்பமாகும்.

யாழ். கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு ஏ, கதிர்காமர், சட்டத்தரணி திரு. டபிள்யு. எஸ் செந்தில்நாதன், திரு. து விசுவநாதன் ஆகியோர் இக்கூட்டத்தில் உரையாற்றுவார்கள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

## கிராமத் தாதிமார் தலைநகருக்கு! புதிய திட்டம் யோசனையில்?

(கொழும்பு)

கிராமப்பகுதி அரசினர் வைத்தியசாலைத் தாதிமார்களைக் கொழும்புநகர வைத்தியசாலைகளில் சேவைக்குஅமர்த்தும் திட்டமொன்று ஆலோசிக்கப்பட்டு வருகின்றது

தற்போது வேலைநிறுத்தத்திலுள்ள தாதிமார்களின் வேலைநிறுத்தம் முடியும்வரை இப்புதிய திட்டம் நடைமுறையிலிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டம்செயல்படும் பட்சத்தில் கிராமப்பகுதி வைத்தியசாலைகள் மூடப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சும், மகளிர் விவகார போதனா அமைச்சும் எடுத்துவருகிறது.

கிராம ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் தாதிமார்களைக் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அழைத்து, அங்கு கடுமையான நோயாளர்களுக்கு அவசரசிகிச்சைமட்டும் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க வேலைக்குத் திரும்பும் தாதிமார்களுக்கு இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் அவர்கள் விரும்பும் பிரதேசங்களுக்குக் கடமைக்குச் செல்லவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

[ய-வா]

## அனாதரவான நிலையில் தாதியின் பிரேதம்!

(வவனியா)

வவனியா அரசினர் ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் ஒரு இளந்தாதியின் பிரேதம் அனாதரவாகக் கிடக்கின்றது.

பரந்தன் 4ம் வாய்க்காலைச் சேர்ந்த செல்வி செல்லத்துரை பஞ்சாட்சரம் என்ற மேற்படி தாதி முன்னர் யாழ். பெரியாஸ்பத்திரியிலும் பின்னர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியிலும் கடமையாற்றியவராம்.

## சி. ஐ. டி. அதிகாரி தற்காலிக வேலைநீக்கம்!

[கொழும்பு]

இரகசிய பொலிஸ் அதிகாரியொருவர், கொழும்பில்இடம்பெற்ற ஆயிரம் ரூபா கள்ள நோட்டு மோசடி தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவருக்கு கள்ள நோட்டுஅடிப்பதற்கான இயந்திரத்தை வெளிநாட்டிலிருந்து தருவித்துகொடுப்பதற்கு இவர் மறைமுகமாக உதவியளித்ததன் மூலம் அந்நியநாட்டு செலவாணி மோசடியில் ஈடுபட்டாரா என அறியும் பொருட்டு விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி கள்ளநோட்டு விவகாரம் தொடர்பாக அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபன அதிபரிடமிருந்து அறிக்கை பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ய-வா)

## மட்டக்களப்பு முன்னாள் எம். பி. காலமானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியின் முன்னாள் 2வது எம். பி. திரு. ராஜன் செல்வநாயகம் கடந்த வெள்ளியன்று இரவு மட்டக் ளப்பிலுள்ள தனியார் மருத்துவ மனையொன்றில் காலமானார்.

சிறிது காலமாகச் சுகவீனமுற்றிருந்த திரு. செல்வநாயகம், 1970-1977 காலப்பகுதியில் மட்டக் களப்புத் தொகுதியில் ஸ்ரீ. ல. சு. கட்சியின் நாடாளுமன்றப் பிரதிநிதியாக இருந்தார்.

## திருமலையில் ஆகாயத் தாக்குதல்

[திருகோணமலை]

திருகோணமலை மாவட்டத்திலுள்ள இலுப்பைக்குளம், சிறுப்பிட்டிம என்னும் குடியேற்றமக்களின் மீது விமானக் குண்டு வீச்சும், ஹெலிகொப்டரிலிருந்து 'ஷெல்' தாக்குதலும் இடம்பெற்றுள்ளன:

நேற்றுமுன்தினம் இக்குண்டு வீச்சுச் சம்பவங்கள் இடம் பெற்றன.

ஒரு குண்டுவீச்சு விமானமும், ஒரு ஹெலிகொப்டரும் இந்த ஆகாயத் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலின்போது ஏற்பட்டுள்ள உயிர்களினதோ உடமைகளினதோ விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

[மா]